வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 28.07.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 229 பக்கங்கள் : 16

## இனப்பிரச்னை விடயத்தில் முன்னேற்றம் ஏற்படமாட்டாது

### மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 28

"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக பொலிஸ் அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்தும் முயற்சிக்கு சர்வகட்சி மாநாட்டில் கடும் எதிர்ப்பு காணப்பட்டது. புதிய ஜனாதிபதி, புதிய பாராளுமன்றம் எனும் நிலைமாறல்களுக்குப் பின்னர்தான் தேசிய இனப் பிரச்னை தொடர்பில் எந்த மாற்றமும் ஏற்பட

15

## இந்தியப் பிரதமரை சந்திக்க தயாராகும் தமிழ்க் கட்சிகள்!

கொழும்பு, ஜூலை 28

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றகரமான முயற்சிகள் எதனையும் எடுக்காது தொடர்ந்து பேச்சுகளில் மாத்திரம் ஈடுபட்டு வருவதால் எதிர்காலத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்கான முயற்சிகளை வடக்கின் தமிழ் கட்சிகள் எடுக்க உத்தேசித்துள்ளதாக அறிய முடிகிறது.

ஜனாதிபதி

15

## பரந்தனில் கிணற்றில் வீழ்ந்து 3 வயது குழந்தை உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி - பரந்தன், காஞ்சிபுரம் பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்து மூன்று வயது குழந்தை உயிரிழந்தது.

வீட்டின் அருகில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்தே ஆண் குழந்தை உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர்.

நேற்று முன் தினம் மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ)

### மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கேட்டு

# இன்று முழு அடைப்பு!

## வடக்கும் கிழக்கும் முற்றாக முடங்கும்
## பல தரப்புக்களும் முழுமையான ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 28

**முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தில் நீதி கோரியும் சர்வதேசத்தின் கண்காணிப்பை வலியுறுத்தியும் இன்று வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு பல தரப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.**

15

## மோட்டார் சைக்கிள் விபத்தில் 2 பாடசாலை மாணவர்கள் பலி!

கொழும்பு, ஜூலை 28

மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை, தம்பகல்ல பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தருஷ சந்தீப, ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சஸ்மித எஷான் ரணவீர ஆகிய பாடசாலை மாணவர்களே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உறவினர்களான இரண்டு மாணவர்களும் 16 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

## ஹர்த்தாலுக்கு தமிழரசு முழுமையான ஆதரவு!

கொழும்பு, ஜூலை 28

"தங்கள் தேசத்துக்கும், தமிழ் மக்களுக்கும் நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று வெள்ளிக்கிழமையைத் துக்க நாளாக அறிவித்துள்ளனர். அதை ஆதரித்து ஹர்த்தாலாகக் கடைப்பிடிக்கின்றோம்."

- இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளவை வருமாறு:-

இந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழர் பிரதேசங்

15

## 13ஆவது திருத்தத்தை செயல்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

### மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன்

கொழும்பு, ஜூலை 28

நாடு முன்னேற வேண்டுமானால் அனைத்து பேதங்களையும் மறந்து அனைவரும் 13ஆவது அரசமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

இந்தியாவில் அதிகாரத்தை பிரிக்கும் போது எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான அதிகாரத்தை வழங்கவில்லை என்றும், 13ஆவது திருத்தத்திலும் இதனையே கடைப்பிடிக்க வேண்டும் என்றும் விக்டர் ஐவன் கூறினார்.

13ஆவது அரசமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவது

15

## வசந்த முதலிகே கைது

கொழும்பு, ஜூலை 28

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளையில் வைத்து நேற்று மாலை அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

2020 பெப்ரவரி 27 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக இடம்பெற்ற சட்டவிரோத கூட்டத்தில் பங்கேற்றமை, தீங்கு விளைவித்தமை, நீதிமன்ற உத்தரவை மீறியமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ்

15

## 5 இஸ்லாமிய அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியது இலங்கை அரசு

கொழும்பு, ஜூலை 28

1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் தடை செய்யப்பட்டுள்ள முஸ்லிம் அமைப்புகளில், 5 அமைப்புகளின் தடையை முற்றாக நீக்கி அரசாங்கம் விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஜூலை 26 ஆம் திகதியிடப்பட்ட 2342/7ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இந்த அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இதன்படி,

15

## நல்லூர் திருவிழாவுக்கு தினசரி ரயில் சேவை!

### நல்லை ஆதீனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினசரி ரயில் சேவையை நடத்தவேண்டும் என ரயில் திணைக்கள பொது முகாமையாளருக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், தற்போது ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நல்லூர் கந்த சுவாமி கோவில் திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் தினமும் ரயில் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்து அடியவர்களின் பயணவசதிகளை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## இப்படியும் நடக்கிறது

நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நடந்த சம்பவங்களை ஒவ்வொருவரும் தத்தமக்கு தேவையான விடயங்களை மாத்திரம் சொல்வதால் முழுமையாக எங்கும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி செயலகம் தமக்கு தேவையானவற்றை வெளியே சொல்லியது. சுமந்திரன் தனக்கு தேவையானவற்றைச் சொன்னார். இப்படி ஒவ்வொருவரும் தத்தமக்கு தேவையான விடயங்களை மாத்திரம் வெளியே பகிர்ந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு தமிழ்க் கட்சி தலைவர் கூட்டம் முடிந்ததும் தொலைபேசியில் தொடர்பில் வந்தார்.

'எதற்காக இந்தக் கூட்டத்தை ரணில் கூட்டினார் என்பது தெரியவில்லை. பதின்மூன்றுக்கு எதிரான எல்லோரையும் வரிசையாக பேசவிட்டு, அதனை நிறைவேற்றுவதற்கு எத்தனை எதிர்ப்பு இருக்கின்றது என்று முதலில் காட்ட விரும்பினாரோ தெரியவில்லை. பின்னர் ஒரு கட்டத்தில் தமிழ்த் தரப்பினரைப் பார்த்து உங்களால்தான் எல்லாம் தாமதமாகின்றது என்று புகார் சொல்ல அவர் முயன்றபோது, நாங்கள் திரும்ப அதனை மறுத்ததுடன் மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்துங்கள் என்று கோரிக்கை விடுத்தோம். முழுமையாக அமுல்படுத்துவதை பின்னர் பார்க்கலாம், முதலில் தேர்தலை நடத்துங்கள் என்றோம். அவர் அதற்கும் சரியாக பதிலை சொல்லாமல் எதுவித முடிவும் இன்றி கூட்டத்தை முடித்துவிட்டு எழும்பிவிட்டார்' என்றார்.

கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே 'என்ன நடந்தது? என்ன நடந்தது?' என்று ஒரு நண்பர் லண்டனிலிருந்து தொடர்ந்து தொடர்பில் வந்து கேட்டுக்கொண்டே இருந்தார். அவருக்கு தகவல் சொல்வதற்காக அவருடன் பேசியபோது, இந்தத் தலைவர் சொன்னதை அவருக்கு மறுஒலிபரப்பு செய்தேன்.

அதற்கு அவர் சொன்னார்: "கூட்டத்தில் பதின்மூன்றுக்கு எதிரானவர்கள் தமது எதிர்க் கருத்தை சொல்ல, தமிழ் தரப்பினர் தமது தரப்பு நியாயங்களைச் சொல்ல இரு தரப்பும் சண்டையிடும், அதனை சாட்டாக வைத்தே கூட்டத்தை முடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் வந்திருப்பார். ஆனால், அவர்கள் எல்லோரும் தேர்தலை வையுங்கள் என்று ஒத்தகருத்தில் நின்றதால் அவர் குழப்பமடைந்திருப்பாரோ என்னவோ?", என்றார் அந்த நண்பர்.

நேற்றுக்காலை கூட்டத்தில் கலந்துகொண்ட மற்றுமொரு கட்சித் தலைவர் பேசினார். கூட்டத்தில் நடந்தது என்ன என்று அவரிடம் கேட்டபோது அவர் சொன்னார், "கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர், முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துங்கள் என்று வலியுறுத்தி பேசிவிட்டு சில நிமிடங்களிலேயே கூட்டத்திலிருந்து சென்றுவிட்டார்.

அவரைத் தொடர்ந்து பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்லவும் அதனையே வலியுறுத்தி பேசிவிட்டு அமர, போதாக்குறைக்கு பேராசிரியர் ஜீ. எல். பீரிஸூம் தேர்தலை வலியுறுத்தி பேசினார்", என்றார்.

சஜித் தரப்பின் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களான மனோ கணேசனோ, ரவூப் ஹக்கீமோ எதுவித கருத்தையும் சொல்லவில்லையாம்.

எப்போதும் சஜித் தரப்பின் ஆள்போலவே அண்மைக்காலமாக செயல்பட்டுவரும் தமிழரசு கட்சி பேச்சாளர் சுமந்திரனும் திடீரென்று தேர்தலை வலியுறுத்தினாராம்.

உடனே குறுக்கிட்ட ஜனாதிபதி 'நீங்கள்தான் பொலிஸ் அதிகாரம் இல்லாமல் அதனை ஏற்றுக்கொள்ளவே மாட்டோம் என்று கூறிவிட்டீர்களே?' என்று கேட்க,

'இல்லை, அது இல்லாமலே தேர்தலை எதிர்கொள்வதுபற்றி பேசலாம்' என்றாராம் சுமந்திரன்.

'பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று கடந்த ஆறு மாதங்களாக நடந்த பேச்சுகளில் தொடர்ச்சியாக கூறிவந்த நீங்கள் இப்போது அது இல்லாமல் ஏற்றுக்கொள்ளலாம் என்றால் எதற்காக இந்த ஆறு மாதங்களையும் வீணடித்தீர்கள்?" என்று ஜனாதிபதி திரும்பிக் கேட்டபோது சுமந்திரனிடம் பதில் இருக்கவில்லையாம்.

இதைத்தான் பொல்லுக் கொடுத்து அடிவாங்குவது என்று சொல்வதோ?

இரண்டு வாரங்களுக்கு முன்னரும், இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்றபோதும், பதின்மூன்று எமது பிரச்னைக்கு ஆரம்பப் புள்ளியாகக்கூட நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பதின்மூன்றை வலியுறுத்தி சில மாதங்களுக்கு முன்னர் கடிதம் எழுதியதால்தான் இந்தியாவின் நிலைப்பாட்டிலேயே மாற்றம் ஏற்பட்டது எனவும் கூறியவர் நமது சுமந்திரன். அதாவது அப்படி கடிதம் எழுதுவதற்கு முன்னதாக இந்தியா நமக்கு சமஷ்டிதான் தீர்வு என்று கருதி வந்ததாக அவர் நேரடியாக சொல்லவிட்டாலும் பதின்மூன்றுக்கு மேலே செல்ல இந்தியா முன்னர் தயாராக இருந்தது என்றார்.

ஆனால், இப்போது பொலிஸ் அதிகாரம் இல்லாமலும் மாகாண சபைகளை ஏற்றுக்கொள்ளவது பற்றியும் பேசலாம் என்கிறாராம்.

நமக்கே இப்படிக் குழப்பம் என்றால் ரணில் எப்படிக் குழம்பியிருப்பாரோ தெரியவில்லை. அதனால்தானோ என்னவோ, கூட்டம் முடிந்த பின்னர் ஒரு தமிழ் கட்சியின் தலைவருக்கு தொலைபேசி எடுத்து கூட்டத்தில் நடந்தவற்றைப்பற்றி கருத்துக் கேட்டிருக்கிறார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மற்றும் சில சிங்களத் தலைவர்களுடன் பேசியபோது கிடைத்த தகவல்களை நாளை பார்ப்போம்.

**- ஊர்க்குருவி.**

# தமிழர் தாயகத்தில் பூரண முடக்கத்துக்கு யாழ். பல்கலை ஊழியர் சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 28

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தில் நீதி கோரியும், சர்வதேசத்தின் கண்காணிப்பை வலியுறுத்தியும் இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் பூரண ஆதரவை தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் இதுகால வரையிலும் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் விவகாரங்கள் பூசி மெழுகப்பட்டு, காத்திரமான நடவடிக்கைகள் எதுவுமின்றி நீர்த்துப்போகச் செய்யப்பட்டமையே வரலாறு. இதேபோன்று, மேற்படி கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்திலும் நடைபெறாது இருக்க வேண்டும் என்பதோடு, கொக்குத் தொடுவாய் மனித புதைகுழி உட்பட தமிழர் பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் உரிய வகையில் சர்வதேச கண்காணிப்புடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகளை வெளிக்கொணர வேண்டியது அவசியமானது என்பதனை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்விவகாரத்தின் நியாயத்தன்மையை புரிந்து கொண்டு, இதனை தமது தனிப்பட்ட சுயலாபங்களுக்கோ, அரசியல் தேவைகளுக்கோ பயன்படுத்தாது உண்மையான தீர்வை வலியுறுத்தி சிங்கள முற்போக்கு சக்திகள் உட்பட்ட அனைத்து தமிழ்த் தரப்பினரும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்பதோடு அனைவரினதும் முழு ஆதரவினையும் வேண்டி நிற்கிறோம்-என்றுள்ளது.

(அ)

## காடுகளுக்கு தீ வைத்தவர் கைது

கொழும்பு, ஜூலை 28

பதுளையில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற, காடுகளுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்லகெட்டுவ நாவில கீழ்பிரிவு காட்டுப்பகுதியில், சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்காக பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போது, குறித்த காட்டுப் பகுதிக்கு, தீ வைக்க முயற்சித்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெமோதரை பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

## அதானி குழும அதிகாரிகளை சந்தித்தார் அமைச்சர் ஹரின்



கொழும்பு, ஜூலை 28

அதானி நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவை சந்தித்துள்ளது.

அதானி குழும பிரதிநிதிகளான தவல் ஷா மற்றும் மனோஜ் தேஷ்முக் ஆகியோருடன் இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில் ஹரின் பெர்னாண்டோ தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அதானி நிறுவனத்தினால், இலங்கையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் மற்றும் மன்னார், பூநகரியில் நிர்மாணிக்கப்படவுள்ள 500 மெகா வாட் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்சார திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக அந்தப் பதிவில் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இச்சந்திப்பில் இலங்கை சுற்றுலா வர்த்தக நாம தூதுவர் சனத் ஜெயசூரியவும் கலந்துகொண்டார்.

## 4ஆம் இடத்தில் கொழும்பு நகரம்

கொழும்பு, ஜூலை 28

உலகின் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள நகரங்களின் பட்டியல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான தகவலை World Of Statistics அமைப்பு வெளியிட்டுள்ளது.

இதன்படி உலகின் மிக மோசமான போக்குவரத்து உள்ள நகரங்கள் பட்டியலில் நைஜீரியாவில் உள்ள நகரான லாகோஸ் முதலிடத்தில் உள்ளது.

இரண்டாமிடத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரமும், மூன்றாம் இடத்தில் சான் ஜோஸ் நகரமும் உள்ளன.

உலகிலேயே போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரங்களின் பட்டியலில் கொழும்பு நான்காவது இடத்தில் உள்ளது.

ஐந்தாவது இடத்தில் இந்தியாவின் டில்லி நகரம் உள்ளது. (அ)

## போதைப்பொருளுடன் ஏழு பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 28

கட்டுநாயக்க விமான நிலையத்தில், 21 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள், இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

இதன்போது, 7 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ)

## நண்பனிடம் திருடிய பொலிஸ் அலுவலர் சிக்கினார்!

கொழும்பு, ஜூலை 28

தன்னுடன் கடமையாற்றும் நண்பரான பொலிஸ் உத்தியோகத்தரின் வங்கி அட்டையை திருடி, வங்கிக்கணக்கில் இருந்து ஒரு இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் பணத்தை களவாடிய கண்டி தலதா மாளிகை பொலிஸ் மையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான நபரிடம் இருந்து 75 ஆயிரம் ரூபாயை மீட்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
28.07.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் தீர்வின் எதிர்காலம்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சி கூட்டம் எதிர்பார்த்த விளைவுகளை தரவில்லையென்று தமிழக் கட்சிகள் கூறுகின்றன. அரசியல் தீர்வு விடயத்தில் ரணிலின் நகர்வுகள் சந்தேகமளிக்கின்றன என்று பிரதான எதிர்க்கட்சி கூறுகின்றது. ஆனால், ஜனாதிபதியின் கருத்துக்கள் இரண்டு விடயங்களை மிகவும் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. ரணில் ஒரு தேர்தலுக்கு சென்றால் அது ஜனாதிபதித் தேர்தல் மட்டும்தான். அதன் பிறகுதான் எந்தவொரு தேர்தல் தொடர்பிலும் சிந்திக்க முடியும். இரண்டாவது, அனைவரதும் உடன்பாட்டோடும்தான், அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு முடிவையும் எடுக்க முடியும்.

இப்போது தமிழர் தரப்புகள் என்ன செய்வது? ஒன்றில் அடுத்த ஜனாதிபதி தேர்தல்வரையில் அமைதியாக விடயங்களை அவதானித்துக் கொண்டு, தமிழர்களின் பேரம்பேசும் அரசியலை பலப்படுத்த வேண்டும். ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றாலும் அடுத்த நிலையில், பாராளுமன்றத்தை முழுமையாக அவரால் கட்டுப்படுத்த முடியுமா என்னும் கேள்வி எழலாம். ஏனெனில், தற்போதுள்ள நிலையில், ஒரு தனிக்கட்சியால் பாராளுமன்ற பெரும்பான்மையை நிலைநாட்ட முடியாது.


ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு சிக்கலான முடிவுகளையும் எடுக்கப்போவதில்லை. ஏனெனில், அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின், தென்னிலங்கையின் பெரும்பாலானவர்களது ஆதரவு தேவை. அதற்குள் கடும்போக்கு தரப்புகளும் அடங்குவர். இந்த நிலையில், ரணிலின் சர்வகட்சி கூட்டங்கள் பெரியளவில் வெற்றிபெறப் போவதில்லை. இதுவரையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை தாண்டிச் செல்லும் நிலையில் பேசப்பட்ட விடயங்கள் தற்போது, பொலிஸ் அதிகாரம் நீக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை நோக்கி கீழிறங்கியிருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவிடமும் இவ்வாறானதொரு பார்வையே இருந்தது. இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஸவர்தன் முன்னிலையிலேயே, 13இல் பிளஸ்ஸும் உண்டு, மைனஸ்ஸும் உண்டு - என்றவாறு அவர் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவை பொறுத்தவரையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை அவ்வாறு பிளஸ் - மைனஸ் என்று நோக்கவில்லை. உண்மையில், தென்னிலங்கை அரசியலானது, அதிகார மாற்றத்துக்கான நிலைமாறு காலத்தில் இருக்கின்றது. ஒருபுறம் ராஜபக்ஷக்களின் வீழ்ச்சி, மறுபுறம் நாட்டுக்கு யார் தலைமை தாங்குவதென்னும் கேள்வியுடன் தென்னிலங்கை அரசியல் நகர்கின்றது. இதற்கிடையில்தான், ரணில் அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வருகின்றார்.

தமிழ் கட்சிகளை பொறுத்தவரையில், சமஷ்டியை அடையும் வழியும் தெரியாமல் - 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட முழுமையாக அமுல்படுத்துவதற்கான அழுத்தங்களை பிரயோகிக்க முடியாமல் - எவரிடம் செல்வதென்று தெரியாமல் தடுமாறுகின்ற நிலையிலேயே இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் சர்வதேசத்திடம் முறையிடக்கூடாதென்று அமெரிக்கத் தூதுவர் கூறிய பின்னர், எவரிடம் சென்று எதைச் சொல்வது? ஒற்றையாட்சிக்குள் தீர்வில்லையென்று கூறுகின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தனது கொள்கையை நிலைநாட்ட இலட்சக்கணக்கான தமிழ் மக்களைத் திரட்டி போராடும் நிலையில் இல்லை. அதற்கான சிறு அசைவுகூட காங்கிரஸ் (முன்னணி) பக்கத்திலிருந்து வரவில்லை. சமஷ்டிக்காக போராடுவோம், வாருங்களென்று அழைப்புவிடுத்தால், ஆயிரமளவில் மக்கள் வருவார்களா என்பதே சந்தேகம். இந்த நிலையில் தமிழ் அரசியல் தரப்புகள் என்ன செய்யப் போகின்றன?

# எழுத்து உலகிலும் ஆளுமை செலுத்திய ஜோர்ஜ் அழகையா...!

ஐயாத்துரை சாந்தன்




ஆபிரிக்க இலக்கியங்களை ஒரு வெறிபோல நான் தேடித் திரிந்த நேரம் அது, 2003இல் கென்யாவுக்கு சென்று வரக்கிட்டிய வாய்ப்புமிக்க மகிழ்ச்சியைத் தந்தது. காடுகளில் ஸஃபாரி அருமையாக இருந்தாலும், நைரோபி மற்றும் பிற நகரங்களின் புத்தகக் கடைகளில் எனது இரண்டாவது ஸஃபாரி அவ்வளவு திருப்திகரமாக அமையவில்லை.

திரும்பும் பயணம் ஒருவிதத்தில் அதற்கு இழப்பீடாக அமைந்தது. பஹ்ரைன் விமான நிலையத்தின் தீர்வையற்ற கடையொன்றின் விற்பனையாளர் காட்டிய புத்தகத்தின் தலைப்பைப் பார்த்ததும் மகிழ்ச்சியாயிருந்தது. A Passage to Africa. ஆசிரியரின் பெயரைப் பார்த்ததும் என் மகிழ்ச்சி அதிகரித்தமை நியாயமானதே, ஜோர்ஜ் அழகையா. ஒரு தமிழர்!

நூலின் பின் அட்டைக் குறிப்பு எனது ஆர்வத்தை மேலும் அதிகரித்தது. ஜோர்ஜ் அழகையாவும் அவரது குடும்பத்தினரும் இலங்கையில் இருந்து கானாவுக்கு குடிபெயர்ந்தவர்கள் என அதில் கூறப்பட்டிருந்தது. மிக நெருங்கிய மனிதராகி விட்டார், உடனேயே புத்தகத்தை வாங்கினேன்.

வீடு வந்து சேர்ந்ததும் செய்த முதல் வேலை, அதைப் படித்து முடித்ததுதான், அதன் சிலிர்ப்பு இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. முதல் அத்தியாயமான ‘இழந்த சொர்க்கம்’, இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த ஒவ்வொரு தமிழரின் விசயத்திலும் இருக்கக்கூடிய அதே சோகமான கதைதான் என்றாலும், சொல்லப்பட்ட விதம் சிறந்த இலக்கிய அழகு வாய்ந்தது.

இலங்கையின் கிழக்கில் உள்ள கல்முனையைச் சேர்ந்த ஒரு குடும்பத்திலிருந்து வந்த டொனால்ட் அழகையா கொழும்பில் பொதுப்பணித்துறையில் மூத்த பொறியியலாளராகப் பணிபுரிந்தவர். ஐந்து குழந்தைகளைக் கொண்ட தனது குடும்பத்தை அழைத்துக் கொண்டு கானாவுக்குச் செல்ல முடிவு செய்கிறார்.

மூன்றாவது தடவையாக இன்று மீண்டும் அந்த அத்தியாயத்தைப் படித்தபோது கடந்த அறுபத்திரண்டு வருடங்களாக நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்ற கொடும் நிதர்சனம் நடுக்கத்தை ஏற்படுத்தியது!

புத்தகத்தின் மீதமுள்ள பத்து அத்தியாயங்கள் ஆபிரிக்காவில் அழகையா வளர்ந்த ஆண்டுகள், அவரின் அனுபவங்கள் மற்றும் ஒரு நிருபராக அவரின் சவாலான காலங்களைப் பற்றிப் பேசுவன. ‘நான் ஆபிரிக்காவைச் சேர்ந்தவன், அல்லது குறைந்தபட்சம் என்னில் ஒரு பகுதி அவ்வாறானது,’ என்று அவர் கூறுகிறார். புத்தகத்தில் உள்ள புகைப்படங்கள் நமக்கு நிறைய விசயங்களைச் சொல்கின்றன.

அழகையா உலகறிந்த ஓர் ஊடகவியலாளர். எனினும், நான் அவரை ஓர் எழுத்தாளராகத்தான் அறிந்தேன், பார்த்தேன். இன்னமும் அவ்வளவு வயதாகியிருக்காத வேளையில், அவர் காலமானதை இரண்டு நாட்களுக்கு முன்பு கேள்வியுற்றபோது மிகவும் வருத்தப்படுவதற்கு அவருடைய படைப்புகளில் இருந்து நான் படித்த ஒரே புத்தகமே போதுமானதாயிருந்தது. ●

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



ஜூலை - 28 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 12
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : ஏகாதசி




**மேடம்** சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாத படி வேலைச்சுமையும் அலைச்சலும் இருக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு குறையும். ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**இடபம்** உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். புதுதொழில் தொடங்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும்.

**மிதுனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமுக அந்தஸ்து உயரும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்** எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி** குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். வியாபாரத்தில் மாற்றங்கள் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**துலாம்** இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**விருட்சிகம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். இடம்பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு** எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்கு ள்ளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**மகரம்** எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் நவீன யுக்திகளை கையாளுவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கும்பம்** உங்களின் நீண்ட நாள் ஆசை நிறைவேறும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**மீனம்** கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக்கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

# மோடி மீளவும் பிரதமராக எமது யாத்திரை உதவும்!

## பா. ஜ. க. தமிழக தலைவர் தெரிவிப்பு

மதுரை, ஜூலை 28

இராமேஸ்வரத்தில் இன்று வெள்ளிக்கிழமை தொடங்கும் 'என் மண், என் மக்கள்' யாத்திரை பிரதமர் மோடி 3ஆவது முறையாக பிரதமராக உதவும் என பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை, மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

"இராமேஸ்வரத்தில் 'என் மண், என் மக்கள்' யாத்திரையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார். இன்று தொடக்க விழா மட்டுமே நடைபெறும். ஜூலை 29இல் யாத்திரை தொடங்கும். தமிழகத்தில் உள்ள 234 தொகுதிக்கும் யாத்திரை செல்லவுள்ளது. இன்று முதல் ஒகஸ்ட் 22 வரை நடைபெறும் முதல் கட்ட யாத்திரைக்கு பா. ஜ. க. மூத்த தலைவர்கள் யாத்திரைக்கு தலைமை வகிப்பார்கள். முதல் கட்ட யாத்திரைக்கு முன்னாள் மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

மொத்தம் 5 கட்டங்களாக 168 நாட்கள் யாத்திரை நடைபெறும். மக்கள் வசிக்கும் பகுதிகளில் கால்நடையாகவும், மக்கள் வசிக்காத பகுதிகளில் வாகன யாத்திரையாகவும் நடைபெறும். 1700 கிலோ மீற்றர் கால்நடையாகவும், 900 கிலோ மீற்றர் வாகனத்திலும் யாத்திரை நடைபெறும். ஜன.11இற்கு முன்பு யாத்திரை முடிக்கப்படும். யாத்திரை நிறைவு நாள் பிரமாண்டமாக நடத்தப்படும்.

யாத்திரை தொடக்க விழாவுக்கு கூட்டணி கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் வருகை இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அவர் சேலத்தில் மருத்துவ சிகிச்சையில் உள்ளார்.

மோடியை 3ஆவது முறையாக பிரதமராக்க தமிழக மக்களின் ஆதரவை பெறும் நோக்கத்தில் இந்த யாத்திரை நடத்தப்படுகிறது. யாத்திரை தொடக்க விழாவில் "மோடி என்ன செய்தார்?" என்ற புத்தகம் வெளியிடப்படும். சட்டசபை தொகுதி வாரியாக நிறைவேற்றப்பட்ட மத்திய அரசின் திட்டங்கள் குறித்த கையேடும் வெளியிடப்படும். இந்த யாத்திரை 3ஆவது முறையாக மோடி பிரதமராக பதவியேற்க நிச்சயம் துணைபுரியும். 10 இடங்களில் பொதுக்கூட்டம் நடத்தப்படும். இதில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்" - என்றார்.

(ஐ)

# மதவாத பா. ஜ. க. ஆட்சி நீடித்தால் மாநிலங்கள் உரிமையை இழக்கும்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 28

மதவாத பா. ஜ. க. ஆட்சி நீடித்தால் பல மாநிலங்கள் தங்களின் உரிமையை இழந்துவிடக் கூடிய பேராபத்து உள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தி. மு. க. தொண்டர்களுக்கு அவர் எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திராவிட மொடல் ஆட்சியில் முதல்வரைப் பயண வழியில்கூட, வாகனத்தை மறித்து சந்தித்து கோரிக்கை மனுவைத் தர முடியும் என்றும், உரிய வகையில் அது நிறைவேற்றப்படும் எனவும் தமிழக மக்களிடம் ஏற்பட்டுள்ள நம்பிக்கையை செல்லும் இடங்களில் எல்லாம் காண்கிறேன்.

திராவிட மொடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பலன் தந்து வருகிறது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு திட்டமாவது அவர்களின் மாதச் செலவை மிச்சப்படுத்தும் வகையில் இருக்கிறது.

மத்தியை ஆளுகின்ற ஜனநாயக விரோத - மதவாத பா. ஜ. க. ஆட்சி நீடித்தால் தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள பல மாநிலங்களும் தங்களின் உரிமையை இழந்துவிடக் கூடிய பேராபத்து இருக்கிறது. கழக அரசு செய்து வரும் சாதனைகள் தொடர வேண்டுமானால், மாநில உரிமைகள் மீட்கப்பட வேண்டுமானால், இந்தியாவின் பன்முகத்தன்மை சிதைந்துவிடாமல் காக்க வேண்டுமானால் பாராளுமன்றத் தேர்தல் களத்தில் நம் பணி முழுமையாகவும் முனைப்புடனும் இருந்திட வேண்டும்.

இந்தியாவைக் காத்திட இந்தியா (ஐ.டேனு.ஐ.யு) உருவாகியிருக்கிறது. இது உண்மையான - ஒன்றுபட்ட இந்தியா. பாராளுமன்றத் தேர்தலில், பாசிச சக்திகளை வீழ்த்தி மகத்தான வெற்றி காணப் போகிற இந்தியா. இந்தியாவின் மாநிலங்களுக்கு அதிகாரமளிக்கக்கூடிய இந்தியா. இவற்றை மனதில்கொண்டு இந்தியா கூட்டணி இந்தியா முழுவதும் வெற்றி பெற இணைந்திருக்கிறோம்.

தமிழகத்தில் இந்தியா முழுமையான வெற்றி பெற, தலைவர் கருணாநிதி நெஞ்சில் ஏந்தும் ஒவ்வொரு உடன்பிறப்பும் ஓயாது உழைத்திட வேண்டும் - என்று கூறியுள்ளார்.

(ஐ)

# தி. மு. கவினர் மீதான அடுத்த ஊழல் பட்டியல் ஆளுநரிடம்!

## அண்ணாமலை வழங்கினார்



சென்னை, ஜூலை 29

ஆளுநரை சந்தித்த அண்ணாமலை, தி. மு. க. அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் உள்ளிட்டோர் மீதான ஊழல் முறைப்பாடுகள் குறித்த பட்டியலை வழங்கினார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியை பா. ஜ. கவின் மாநில தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் சந்தித்தபோதே இந்தக் கோவையை வழங்கினார்.

இராமேஸ்வரத்தில் இருந்து வரும் 28ஆம் திகதி அண்ணாமலை பாதயாத்திரை தொடங்க உள்ளார். இந்த பாதயாத்திரைக்கு முன்பாக தி. மு. கவினரின் ஊழல் புகார்கள் தொடர்பான இரண்டாவது பட்டியல் வெளியிடப்படும் என்று அறிவித்திருந்தார்.

முன்னதாக, கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி தி. மு. கவில் உள்ள முக்கிய பிரமுகர்களின் சொத்துப் பட்டியலை 'தி. மு க. கோவை1' என்ற தலைப்பில் அண்ணாமலை வெளியிட்டு இருந்தார்.

இந்நிலையில், ஆளுநரை சந்தித்த அண்ணாமலை, தி. மு. க. அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் உள்ளிட்டோர் மீதான ஊழல் புகார்கள் குறித்த பட்டியலை வழங்கினார். இதனை தனது ருவிற்றர் பக்கத்திலும் அண்ணாமலை பகிர்ந்துள்ளார்.

ஈழநாடு



**அதிகாரப்பகிர்வு விடயத்தில்**

# ஒற்றையாட்சியை மொட்டு நிச்சயமாக பாதுகாக்கும்!

## நாமல் எம்.பி. திட்டவட்டம்



**கொழும்பு, ஜூலை 28**

**"அதிகாரப்பகிர்வு விடயத்தில் ஒற்றையாட்சியை பாதுகாக்கும் வகையிலேயே பொதுஜன பெரமுன கட்சி செயற்படும்." - என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன கட்சியின் எம்.பிக்களுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நாமல் ராஜபக்ஷ,

ஒற்றையாட்சியை நிலைநாட்டுவதற்காகவே மகிந்த ராஜபக்ஷ 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்தார். எனவே, 13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் மக்கள் ஆணையின் பிரகாரமே பொதுஜன பெரமுன கட்சி செயற்படும்.

13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி பேசுவதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல் குறித்தே கதைக்கவேண்டும். மகிந்த ராஜபக்ஷவே வடக்கு, கிழக்கு மக்களுக்கு வாக்களிக்கும் நிலைமையை ஏற்படுத்திக்கொடுத்தார். வடக்கு, கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்தினார்.

மகிந்த பதவிக்கு வருவதற்கு முன்னர், 13 அமுலில் இருந்தாலும் மாகாணசபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. அவரே மக்கள் பிரதிநிதித்துவத்தை தெரிவுசெய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினார். தற்போது அவர் பதவியில் இல்லை. மாகாணசபையிலும் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, 13 பற்றி கதைக்க வேண்டுமானால் முதலில் தேர்தலை நடத்துவது பற்றி பேசப்பட வேண்டும்-என்றார். (அ)

# வயோதிபத் தம்பதி வெட்டிக் கொலை!

## காலியில் பயங்கரம்

கொழும்பு, ஜூலை 28

வயோதிபத் தம்பதியினர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி - இக்கடுவை பிரதேசத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

பிள்ளைகள் இல்லாத இவர்கள் இருவரும் வீட்டில் இருந்த வேளை கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

72 வயதுடைய கணவனும், 68 வயதுடைய மனைவியும் வீட்டிலிருந்து நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் வீட்டுக்கு அயல்வீட்டுக்காரர் ஒருவர் நேற்று முன் தினம் மாலை சென்றுள்ளார். அப்போது அவர்கள் இருவரும் இரத்த வெள்ளத்தில் சடலங்களாகக் கிடந்துள்ளனர்.

பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், இருவரின் சடலங்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த வயோதிபத் தம்பதியினரின் வீட்டுக்கு நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் ஓட்டோ ஒன்றில் இனந்தெரியாத நபர்கள் சென்றிருந்தார்கள் என்று அயல்வீட்டுக்காரர்கள் இருவர் பொலிஸாருக்கு வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.

கொலையாளிகளைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மர உச்சியில் பரண் அமைத்து போதைப்பொருள் விற்ற பெண்!

## பொலிஸாரிடம் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 28

வெயாங்கொட, மாரபொல பிரதேசத்தில் பெரிய மரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த பரணில் இருந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாரபொல பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

01 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயின், 06 தேசிய அடையாள அட்டைகள், 5 வெளிநாட்டு பயண ஆவணங்கள் மற்றும் 8 கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தனது வீட்டை அண்டிய வனப்பகுதியில் உள்ள பெரிய மரத்தின் உச்சியில், யாரும் பார்க்காத வகையில் கட்டைகள் மற்றும் பலகைகளால் கட்டப்பட்டுள்ள இந்த பரணில் இருந்து போதைப்பொருள் வர்த்தகத்தை நடத்தி வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தரையிலிருந்து சுமார் 100 அடி உயரத்தில் இந்த பரண் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு பையில் பணத்தை வைத்து கயிற்றின் உதவியுடன் பரணுக்கு அனுப்பிய பின்னர், பரணிலிருந்து தூள் கீழே இறக்கப்பட்டுள்ளது.

அந்த பரணில் இருந்து சுற்று வட்டாரப் பகுதிகளை பரவலாக அவதானிக்க முடியும், வெளியாட்கள் உள்நுழைவதை அவதானிக்க முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் வாங்குவதற்கு பணம் இல்லாதவர்கள் கையடக்கத் தொலைபேசிகள், தேசிய அடையாள அட்டைகள் அல்லது வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை அடகு வைத்து ஹெரோயின் போதைப்பொருளை வழங்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைத்தொலைபேசிகளின் பின்புறம் கொடுக்கப்பட்ட ஹெரோயின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தனது கணவருடன் இணைந்து இந்த மோசடியை சில காலமாக வெற்றிகரமாக நடத்தி வந்துள்ளார்.

சந்தேக நபரின் கணவரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் 20,000 பேருக்கு பற்றாக்குறை!

## கூறுகிறார் டிரான் அலஸ்

கொழும்பு, ஜூலை 28

சுமார் 20,000 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

சில உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகுகின்றமை, ஓய்வு பெறுதல் மற்றும் அங்கவீனமடைதல் ஆகிய காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு தீர்வாக 2,000 பொலிஸ் உத்தியோகத்தர்களை புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# நாடு முழுக்க வைத்தியசாலைகளில் பற்சிகிச்சை மையங்கள் செயலிழப்பு



கொழும்பு, ஜூலை 28

பற்சிகிச்சைக்கு தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இன்மையினால், தேசிய பல் வைத்தியசாலை உள்ளிட்ட நாட்டின் வைத்தியசாலைகளின் பற்சிகிச்சை மையங்கள் செயலிழந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பல் வைத்திய நிபுணர்கள் சங்கம் சுகாதார அமைச்சுக்கு அறியப்படுத்தியுள்ளது.

பல் மருத்துவ சேவையை தடையின்றி முன்னெடுத்து செல்வதற்கு, இரண்டாயிரம் வகையான மருந்துகள் அவசியமாகும்.

அவற்றில் 230 வகையான மருந்துபொருட்கள் மற்றும் உபகரணங்கள் உடனடியாக வழங்கப்படவில்லை எனில், பல் மருத்துவ சேவையின் வீழ்ச்சியை தடுக்க முடியாது என அந்த சங்கத்தின் செயலாளர் மஞ்சுள ஹேரத் தெரிவித்தார். (அ)

# கிணற்றுக்குள் வீழ்ந்து 4 வயது குழந்தை பலி!

கொழும்பு, ஜூலை 28

வாரியபொல - பண்டார கொஸ்வத்தை பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 4 வயதான குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

குழந்தை வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் பின்புறத்தில் காணப்பட்ட கிணற்றின் சுமார் 2 அடி உயரம் கொண்ட மதிலின் ஊடாக குழந்தை கிணற்றில் வீழ்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சனசமூக நிலையப் பூங்கன்றுகளுக்கு மண்ணெண்ணெய் ஊற்றிய விசமிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அச்சுவேலி, வளர்மதி சனசமூக நிலையத்தில் உள்ள பூச்செடிகள், பயன் தரு மரங்களுக்கு அடையாளம் தெரியாத இருவர் மண்ணெண்ணெய் ஊற்றிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதியிலுள்ள சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த இருவரும் அப்பகுதி மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது குறித்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலி ஸார் தெரிவித்தனர். (அ)

# சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 28

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய பொலிஸ் மா அதிபரினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் வழங்கப்பட்டவர்களுள், 7 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 4 பதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் அடங்குகின்றனர். (அ)

# இனப்பிரச்னை பாதிப்பு குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும்

## கூறுகிறார் சமன் ரத்னப்பிரிய

கொழும்பு, ஜூலை 28

**இனப்பிரச்னையால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்படவேண்டிய தேவை நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளதாக ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.**

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூன்று தசாப்த கால யுத்தத்தினால் இன, மத வேறுபாடின்றி அனைவரும் பாரிய சேதங்களை சந்திக்க நேரிட்டது.

இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளது. அதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் முன்வைத்த யோசனை



கள் நடைமுறைப்ப டுத்தப்படவில்லை.

தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் பொறிமுறைகளை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான பொறிமுறையை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாவிட்டால் நாடு மீண்டும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும். எனவே சமூகத்தை தெளிவுபடுத்தி இதனைச் செயற்படுத்துவதற்கான ஆதரவைப் பெற வேண்டும்- என்றார்.

(அ)

# சிறுநீரக சத்திரசிகிச்சைகளை இடைநிறுத்தும் அபாய நிலை!

கொழும்பு, ஜூலை 28

கொழும்பு தேசிய சிறுநீரக வைத்தியசாலை உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள சிறுநீரக வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்துகளுக்கான தட்டுப்பாடு காரணமாக எதிர்காலத்தில் சத்திர சிகிச்சைகளை இடைநிறுத்தும் அவதான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

மருந்து தட்டுப்பாடு காரணமாக அந்த வைத்தியசாலைகளில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகளை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மருந்து இருப்புக்களை முறையாக பராமரிக்காத காரணத்தினால் அவசரகால மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அதிகாரிகள் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் அவசர கொள்வனவின் போது அதிக விலை கொடுத்தே மருந்துகளை கொள்வனவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(அ)

# இனப்பிரச்னையால் பாதிக்கப்பட்டோர் உண்மையைக் கண்டறிவதற்கு வாய்ப்பு

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 28

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிறுவுவதன் மூலம் இனப்பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ள சகல பிரிவினருக்கும் உண்மையைக் கண்டறிய வாய்ப்பு கிடைக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படவேண்டும் எனவும் அதற்கான வசதிகளை ஏற்படுத்



திக் கொடுப்பது மாத்திரமே அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்த அமைச்சர், சட்டம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவிற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படும் எனவும் கூறினார்.

ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்காக சர்வதேச மட்டத்தில் பல விரிவுரைகளை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், இடைக்காலச் செயலகம் அமைக்க ஏற்கனவே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் இதன் ஊடாக ஆணைக்குழுவின் பணிகளை விரைவில் தொடங்குவதற்கான அடித்தளத்தைத் தயார்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக்கூறல் செயல்பாட்டின் அவசியத்தையும் அதனை ஸ்தாபிப்பதில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் விளக்கிய அமைச்சர், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் மேற்கொள்வதாகவும் வலியுறுத்தினார்.

(அ)

# இரண்டு மாணவர் குழுக்கள் மோதல்

## இருவர் காயம்: நால்வர் கைது

கொழும்பு, ஜூலை 28

அம்பலாங்கொடை பிரதேசத்தில் இரு பாடசாலை மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட முறுகலில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை அடுத்து நான்கு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

அம்பலாங்கொடை பொலவத்தை பிரதேசத்தில் வைத்து மாணவர்கள் முறுகலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சம்பவத்தில் காயமடைந்த மாணவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பணம் கொடுக்கல் வாங்கலே இந்த சம்பவத்துக்கு காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-கே)

# ஒரு மில்லியன் பார்வையாளர்களை தாண்டியது தாமரைக் கோபுரம்!

கொழும்பு, ஜூலை 28

கொழும்பு தாமரை கோபுரம் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது முதல் இன்று வரை அதனை பார்வையிட வந்தவர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனை தாண்டியுள்ளது.

கொழும்பு தாமரை கோபுரத்தைப் பார்வையிட்ட ஒரு மில்லியன் மக்களில் சுமார் 22,000 வெளிநாட்டவர்கள் உள்ளடங்குகின்றனர்.

ஏற்கனவே, கோபுரத்தைப் பார்வையிடுவதற்கான டிக்கெட்டுகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், தற்போது இரவு 10 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள் என்று நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், வார இறுதி நாட்களில் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை டிக்கெட்டுகள் வழங்கப்படும். வார இறுதி நாட்களில், பொதுமக்கள் இரவு 11 மணி வரை தாமரை கோபுரத்தில் இருக்க முடியும் என நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது.

தாமரை கோபுரத்தை சேதப்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் சொத்துக்களை சேதப்படுத்திய பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலக குற்றவாளிகளை பார்வையிட்ட நீதவான்

கொழும்பு, ஜூலை 28

மடகஸ்கிலிருந்து நாடு கடத்தப்பட்ட பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் சலிந்து குணரத்ன எனும் குடு சலிந்து, ஹரக் கட்டா எனப்படும் கசுன் சிந்தக மற்றும் பாணந்துர சுட்டே என்ற அமில சுசிர ஆகிய மூன்று பாதாள உலகக் குற்றவாளிகளின் நிலைமையை அவதானிப்பதற்காக கோட்டை நீதவான் திலின கமகே நேற்று முன் தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு விஜயம் செய்தார்.

இலங்கையில் பாதாள உலகக் குழுக்களின் முக்கிய உறுப்பினர்கள், கொலைகள், போதைப் பொருள் கடத்தல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கிற்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றங்களுக்காக பிரதிவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு காயங்களோ அல்லது சந்தேகத்திற்கிடமான எதுவும் இல்லையெனவும் சந்தேக நபர்கள் மூவரும் முறையான காற்றோட்டத்தில் இருந்ததையும் அவர்களுக்கு மலசலகூட வசதிகள் மற்றும் குளியலறை வசதிகள் இருந்ததையும் நீதவான் அவதானித்தார்.

மூன்று சந்தேக நபர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலைமைகளை அவதானித்த நீதவான், அவர்களை மேலும் தடுத்து வைக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுமதி வழங்கினார்.

(அ)

# 58 பஸ்களிடம் இருந்து தண்டப்பணம் அறவீடு

கொழும்பு, ஜூலை 28

அனுமதிப்பத்திரத்தை மீறி சேவையில் ஈடுபட்ட 58 பஸ்களுக்கு எதிராக தண்டப்பணம் அறவிடப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

பயணிகளிடம் அதிகக் கட்டணத்தை அறவிட்டமை, அதிகளவில் பயணிகளை ஏற்றிச் சென்றமை, வீதி போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை உள்ளிட்ட பல காரணங்களை அடிப்படையாக வைத்து குறித்த பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை



எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட பஸ்களை அடிப்படையாக வைத்து இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் சோதனை நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புள்ளிவிவரங்களுக்கு அமைவாக விபத்துக்களினால் நாளொன்றுக்கு உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை ஏழாகக் காணப்படுகின்றது.

பொலிஸ் திணைக்களத்தின் புள்ளிவிவரங்களுக்கு அமைவாக, இவ்வருடத்தின் ஜூலை மாதம் 10 ஆம் திகதிவரை 10,055 விபத்துக்கள் பதிவாகியுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

(அ)

# 13 ஆவது திருத்தம் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?

## கேள்வி எழுப்புகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஜூலை 28

**13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஜனாதிபதி, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முதலில் அறிவிக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.**



சர்வகட்சி மாநாடு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஜனாதிபதி, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முதலில் அறிவிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் யோசனை என்ன என்பதை முதலில் எமக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

அந்த யோசனைகள் வெளிவந்தவுடன், நாம் இது தொடர்பாக ஆராய முடியும்.

இது தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு, எமது யோசனைகளையும் இதில் முன்வைத்து அடுத்தக்கட்டத்தை நோக்கி செல்ல முடியும் -என்றார்.

(அ)

# சவூதியிடம் மன்னிப்பு கோரியது இலங்கை

கொழும்பு, ஜூலை 28

இலங்கை வந்த சவூதி இராஜதந்திரிகள் குழுவுக்கு தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் அழுத்தம் கொடுத்த சம்பவம் தொடர்பில், இலங்கைக்கான சவூதி தூதுவரிடம், வெளிவிவகார அமைச்சு மன்னிப்பு கோரியுள்ளது.

குறித்த 3 பேர் கொண்ட சவூதி இராஜதந்திரிகள், அந்த நாட்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பெருமளவிலான மரங்களை நடும் திட்டத்துக்கு இலங்கையின் பயிரிடல் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வந்திருந்தனர்.

இந்த திட்டம் வெற்றியடையும் பட்சத்தில் சவூதி அரேபியாவுக்கான தென்னையை ஏற்றுமதி செய்து சில வருடங்களில் சுமார் 10 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வருமானமாக ஈட்டக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி, சம்பந்தப்பட்ட சவூதி இராஜதந்திரிகளை கண்காணிப்புப் பணிகளுக்கு அழைத்துச் செல்லவில்லை என ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

(அ)

# சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டி கொலை செய்யப்பட்டமை உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 28

தென்மராட்சி மட்டுவில் வடக்கு பகுதியில் வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டி கொலை செய்யப்பட்டுள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மூதாட்டி நேற்று முன் தினம் காலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டியின் தலைப்பகுதியில் வெட்டுக்காயங்கள் காணப்பட்ட நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் மூதாட்டி கொலை செய்யப்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

82 வயதுடைய தம்பையா சரோஜினி என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

### மருத்துவ நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளிட்ட

# நிறைவேற்றுப்பிரிவு அதிகாரிகளுக்கு கைவிரல் அடையாளம் கட்டாயமாகும்

கொழும்பு, ஜூலை 28

சுகாதார அமைச்சின் மருத்துவ நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளிட்ட சில நிறைவேற்றுப்பிரிவு அதிகாரிகளின் அலுவலக வருகை மற்றும் வெளியேறும் தரவுகளை உறுதிப்படுத்திக்கொள்ள கைவிரல் அடையாளம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் குறித்த அதிகாரிகள் கைவிரல் அடையாளத்திற்கான இயந்திரத்தினை கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் நிர்வாகப்பிரிவின் மேலதிக செயலாளர் கீதாமணி சீ.கருணாரத்னவின் கையொப்பத்துடன் இதற்கான அறிவித்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலதிக செயலாளர்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப்பிரிவு அதிகாரிகளுக்கு இந்த அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவையில் இது வரை காலம் இவ்வாறான கைவிரல் அடையாளம் பயன்படுத்துவது காணப்படவில்லை.

வருகை நேரம் மற்றும் வெளியேறும் நேரம் தொடர்பிலான தரவுகளுக்கு கைவிரல் அடையாள இயந்திரப் பயன்பாட்டு முறையை அறிமுகப்படுத்துவதானது வைத்தியர்களின் சேவை யாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

அத்துடன், சுகாதார அமைச்சின் மருத்துவ நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளிட்ட சில நிறைவேற்றுப்பிரிவு அதிகாரிகளுக்கு கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்பாட்டில் கொண்டுவருவது நடைமுறைக்கு சாத்தியமானது இல்லை என அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பிரிவினை கோரும் தரப்புக்களின் நிலைப்பாடு இன்னும் மாறவில்லை

## ரஞ்சித் பண்டார சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 28

நாட்டில் பிரிவினை வேண்டும் என்று கோரும் தரப்புக்களின் நிலைப்பாடு இன்னமும் மாறவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த தற்போது முயற்சிக்கப்படுகிறது. ஏன், இதனை இவ்வளவு அவசரமாக செய்ய வேண்டும்?

13 இற்கு முதல், இருக்கும் உரிமைகளை தாருங்கள். தேர்தலை முதலில் நடத்துங்கள்.

சர்வகட்சி மாநாட்டின் போது, ஜனாதிபதியோ தனக்கு மக்கள் ஆணை கிடையாது என்றும் இதனால்தான் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேச்சு நடத்துவதாகவும் கூறியிருந்தார்.

இது சிறந்த நிலைப்பாடு தான். ஆனால், இதுதொடர்பாக நாம் அவதானத்துடன் இருக்கவேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு வரும் சில கட்சிகள், இந்நாட்டின் சாதாரண பொது மக்களை பிரதிநிதித்துவப்ப டுத்துவதில்லை.

அன்றிலிருந்து நாட்டில் பிரிவினை வேண்டும் என்று கோரும் தரப்புக்கள்தான் இவைகள்.

அவர்களின் நிலைப்பாடு இன்னமும் மாறவில்லை. அதுபோன்றவர்கள் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்.

யாரேனும் ஒரு தரப்பை சந்தோசப்படுத்தவோ, நாட்டில் மீண்டும் ஒரு பிரிவினைவாதத்தை ஏற்படுத்தவோ நாம் கட்சி என்ற ரீதியில் இணங்கப் போவதில்லை-என்றார். (அ)

# உபபொலிஸ் பரிசோதகர் கடமையிலிருந்து நீக்கம்

கொழும்பு, ஜூலை 28

முறைப்பாட்டை முறையாக பெற்றுக்கொள்ளாத குற்றச்சாட்டில், மெதகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மெதகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அய்வெல, சேனாபதி பிரதேசத்தில் வீடொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் போது கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதியை உபபொலிஸ் பரிசோதகர் முறைப்பாட்டில் பதிவு செய்யவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டில் சுமார் 150,000 ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பெண் முறைப்பாடு அளித்துள்ளார்.

எனினும் உபபொலிஸ் பரிசோதகர் பொருட்களின் பெறுமதியை முறைப்பாட்டில் பதிவு செய்யவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த உபபொலிஸ் பரிசோதகர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் ஆலோசனைகளுக்கு குறித்த உபபொலிஸ் பரிசோதகர் கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், மொனராகலை உப பொலிஸ் அதிகாரி ஒருவர் மேற்பார்வையின் கீழ் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 28

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு விழாவின் நிறைவு வைபவம் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் இது தொடர்பாக முன்னெடுக்கக் கூடிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு ஆர்வமுள்ள முன்னாள் ஆசிரிய மாணவர்களை அல்லது கடந்த காலக் கற்கை அணிசார்ந்த பிரதிநிதிகளை எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்திற்கு வருகை தருமாறு கலாசாலை அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# எப்படி இருக்கும் ‘இந்தியா’வின் எதிர்காலம்?



வெ.சந்திரமோகன்

இந்திய அரசியல் களம் புதிய காட்சிகளுக்குத் தயாராகிறது. ஒருபுறம் ‘இந்தியா’ (**Indian National Developmental Inclusive Alliance**), மறுபுறம் என்டிஏ (தேசிய ஜனநாயகக் கூட்டணி) எனப் பெரும் படைகள் மோதவிருக்கும் 2024 மக்களவைத் தேர்தல் மிகுந்த கவனம் ஈர்க்கிறது. பிரதமராக மோடி பொறுப்பேற்ற பிறகு, பாஜகவின் நகர்வுகளுக்கு எதிர்வினையாகத்தான் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் இருந்துவந்தன.

முதல் முறையாக, எதிர்க்கட்சிகளின் வியூகத்துக்கு எதிர்வினையாக பாஜக வெளிப்படையாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது. எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடைபெற்ற நாளில், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிக் கூட்டத்தை பாஜக ஒருங்கிணைத்ததே இதற்கு உதாரணம். ஒருவகையில், இதை பாஜகவின் பலவீனமாகப் பார்க்க முடியும் என்றாலும், எதிர்க்கட்சிகளின் வியூகத்தை முறியடிக்க அக்கட்சி முழுமூச்சாகத் தயாராகிறது என்றும் கொள்ள முடியும்.

**மோடி யுகம்:**

1998இல் காங்கிரஸுக்கு எதிராக பாஜக தலைமையில் உருவான என்டிஏ கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது. வாஜ்பாய் பிரதமராகப் பொறுப்பேற்றார். எனினும், கூட்டணியில் ஏற்பட்ட சிக்கல்களால் 13 மாதங்களில் ஆட்சி கவிழ்ந்தது. 1999இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்ற இந்தக் கூட்டணியால், 2004 தேர்தலில் வென்று ஆட்சியைத் தக்கவைக்க முடியவில்லை. 2009இல் அத்வானியைப் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்திப் போட்டியிட்ட அக்கூட்டணிக்குத் தோல்விதான் கிடைத்தது.

தீவிர இந்துத்துவம், வளர்ச்சி ஆகிய இரண்டு அம்சங்களுக்காகப் பேசப்பட்ட மோடி, 2014 தேர்தலில் முன்னிறுத்தப்பட்டார். அடிமட்ட மக்கள் வரை சென்றடையும் வகையிலான பேச்சாற்றல் கொண்ட மோடிக்கு அப்போது முதல் வெற்றிமுகம் தொடர்ந்தது. எனினும், சூழல் வேகமாக மாறிவருகிறது.

2019 தேர்தலில் பாஜகவுக்கு 37 வீத வாக்குகள் கிடைத்தன. இன்றைக்கு எந்தக் கூட்டணியிலும் சேராமல் ஒதுங்கியிருக்கும் பிஜு ஜனதா தளம், பகுஜன் சமாஜ் கட்சி, பிஆர்எஸ், தெலுங்கு தேசம், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் போன்றவற்றைத் தவிர்த்து, பல பிரதான கட்சிகள் ‘இந்தியா’ கூட்டணியில் இருக்கும் நிலையில், அவற்றின் மொத்த வாக்கு சதவீதம் மிக முக்கியமான காரணியாக 2024 தேர்தலில் அமையும். 2019 மக்களவைத் தேர்தலில், என்டிஏ 353 இடங்களைக் கைப்பற்றியிருந்தது (மொத்த வாக்குகள் 42 வீதம்).

‘இந்தியா’ கூட்டணியில் உள்ள கட்சிகள் அந்தத் தேர்தலில் மொத்தமாக வென்ற இடங்கள் 134 தான். ஆனால், மொத்த வாக்குகள் 35 வீதம். எனவே, இந்தக் கூட்டணியின் நகர்வுகளைக் கண்டு பாஜக பதற்றம் அடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. அதேநேரம், மொத்த வாக்கு சதவீதத்துக்கும் தொகுதிவாரியான வெற்றிக்கும் வித்தியாசம் உண்டு. அதை அந்தந்தத் தேர்தல் களத்தின் வெவ்வேறு காரணிகள்தான் தீர்மானிக்கின்றன.

**கூட்டணியின் முக்கியத்துவம்:**

2014க்குப் பின்னர் பாஜகவுக்குக் கிடைத்த வெற்றிகளுக்கு மோடியின் முகம் முக்கியக் காரணியாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சிகள் - தேசியக் கட்சிகளும் பலம்வாய்ந்த மாநிலக் கட்சிகளும் - ஒன்றிணைந்திருக்கும் இந்தத் தருணத்தில், மோடியின் பெயர் மட்டுமே செல்லுபடியாகிவிடாது. பாஜக இதை நன்றாகவே உணர்ந்திருப்பதால், இதுவரை பெரிதாகக் கண்டுகொள்ளப்படாத கூட்டணிக் கட்சிகள் இப்போது முக்கியத்துவம் பெறுகின்றன.

என்டிஏ கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் 38 கட்சிகளில், 24 கட்சிகளுக்கு மக்களவையில் உறுப்பினர்களே இல்லை. ‘இந்தியா’ கூட்டணியிலும் 10 கட்சிகள் மக்களவை உறுப்பினர்கள் இல்லாதவை. எனினும், வெற்றி வாய்ப்பு நழுவுவதைத் தவிர்க்க எல்லா பக்கமும் அணை போட வேண்டிய அவசியம் இரண்டு தரப்புக்கும் உருவாகியிருக்கிறது.

2004 மக்களவைத் தேர்தலுக்குப் பின்னரே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி உருவானது. 2009 தேர்தலில் அந்த வெற்றி தொடர்ந்தது. எனினும், காங்கிரஸைப் பொறுத்தவரை தேசிய அளவில் தேர்தலுக்கு முந்தைய கூட்டணியில் இத்தனைத் தீவிரம் காட்டுவது இதுவே முதல் முறை. பாஜகவை வீழ்த்தியே ஆக வேண்டும் எனும் முனைப்பில் பிரதமர் பதவிக்கான போட்டியிலிருந்து விலகவும் தயார் எனக் காங்கிரஸ் சொல்வது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

**காத்திருக்கும் சவால்கள்:**

‘இந்தியா’ கூட்டணிக்குத் தலைமை வகிப்பது யார், ஒருவேளை வெற்றி பெற்றால் பிரதமர் யார் எனும் கேள்விகள் எழத் தொடங்கியிருக்கின்றன. பாஜக இதைப் பிரதானமான விமர்சனமாக முன்வைக்கிறது. பெங்களூரு கூட்டத்தில் முக்கியத்துவம் கிடைக்காததால் நிதீஷ் குமார் அதிருப்தியடைந்ததாகச் செய்திகளைப் பரப்புவதில் பாஜக ஈடுபடுகிறது. அதேபோல, மேற்கு வங்கம், கேரளம் போன்ற மாநிலங்களில் இதுவரை நிலவிவந்த அரசியல் சமன்பாடுகளை அவ்வளவு எளிதில் கலைத்து, புதிய களத்தை உருவாக்கிவிட முடியாது.

மாநில அரசியல் களம் என்ற அளவில் காங்கிரஸ் கட்சிக்கும் திரிணமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய கட்சிகளுக்கும் இடையிலான முரண்கள், தேசிய அளவில் எப்படிச் சரிசெய்யப்படும் என்பது முக்கியமான கேள்வி. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கும் அம்மாநிலக் காங்கிரஸ் தலைவர் அதீர் ரஞ்சன் சௌத்ரிக்கும் எப்போதும் ஆகாது. உள்ளாட்சித் தேர்தல் வன்முறை தொடர்பாக இரண்டு கட்சிகளுக்கும் இடையே கடும் கருத்து முரண்கள் ஏற்பட்டது மிகச் சமீபத்திய அம்சம். பஞ்சாபில் காங்கிரஸைப் படுதோல்வி அடையச் செய்து ஆட்சியைக் கைப்பற்றிய ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சியினர் மீது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இதனால் அம்மாநிலக் காங்கிரஸார் அதிருப்தியில் ஆழ்ந்திருக்கின்றனர். பாஜக மிகச் சாதுரியமாக இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இவற்றைச் சமாளிப்பது ‘இந்தியா’ கூட்டணி எதிர்கொள்ளும் இன்னொரு சவால். அதேபோல், இந்த ஆண்டு தேர்தலை எதிர்கொண்டிருக்கும் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களில் காங்கிரஸ் தலைவர்களுக்கு மத்தியில் நிலவும் பூசல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவது அவசியம்.

தொகுதிப் பங்கீடு எந்த அளவுக்குத் திறம்படத் திட்டமிடப்படுகிறது என்பதைப் பொறுத்துதான் இக்கூட்டணியின் வெற்றிக் கணக்கு உறுதியாகும். இவ்விஷயத்தில் வழக்கமான கூட்டணியிலேயே பல பிரச்சினைகளைக் கட்சிகள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இதுவரை அரசியல் களத்தில் எதிரிகளாகப் பாவித்துவந்த கட்சிகள், இப்போது கூட்டணி அமைத்துக் களம் காணும் போது, அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் பகைமை நீடித்தால், தேர்தல் பணிகளில் சுணக்கம் ஏற்படும். கூட்டணி சார்பில் பாஜகவுக்கு எதிராக அல்லது என்டிஏ கூட்டணிக் கட்சிக்கு எதிராகப் பொது வேட்பாளரை நிறுத்தும்போது இந்தச் சிக்கல் பெரிய அளவில் எழலாம்.

**பயணங்கள் முடிவதில்லை:**

ராகுல் காந்தி மேற்கொண்ட ‘ஒற்றுமை இந்தியா’ (பாரத் ஜோடோ) நடைப்பயணத்தின் மூலம் காங்கிரஸுக்குக் குறிப்பிட்ட அளவுக்கு வலிமை சேர்ந்திருப்பது மறுக்க முடியாததுதான். ஆனால், இதுபோல் பல நடைப்பயணங்கள், சுற்றுப்பயணங்களைக் காங்கிரஸ் தலைவர்களும், ‘இந்தியா’ கூட்டணியின் பிற தலைவர்களும் மேற்கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் பிரத்யேகப் பிரச்சினைகளைப் பிரதானமாக முன்வைத்துப் பிரச்சாரம் செய்யும் மோடியின் பாணியை எதிர்கொள்வது அத்தனை எளிதல்ல.

மணிப்பூரில் கிட்டத்தட்ட மூன்று மாதங்களாகக் கலவரம் நடைபெற்றுவரும் நிலையில், இரண்டு பெண்கள் நிர்வாணமாக இழுத்துச்செல்லப்பட்ட சம்பவத்திலேயே எதிர்க்கட்சிகள் எவ்வளவு குரல் கொடுத்தாலும், அதை மிக எளிதாகக் கையாளும் மோடியின் பாணி அசாதாரணமானது.

நாடாளுமன்றத்துக்கு வெளியே அந்தச் சம்பவம் பற்றிப் பேசிய மோடி, விரைவில் தேர்தலைச் சந்திக்கவிருக்கும் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களையும் மணிப்பூர் பட்டியலில் சேர்த்துவிட்டது தனி சாமர்த்தியம். மதச்சார்பற்ற ஜனதா தளம், அகாலி தளம் போன்ற கட்சிகள் மீண்டும் பாஜகவை நெருங்க ஆரம்பித்திருக்கின்றன. ஆக, முன்பைவிட அதிக எச்சரிக்கை உணர்வுடன் எதிர்க்கட்சிகள் இருந்தாலும் பாஜகவின் காய்நகர்த்தல்களை வெல்ல இன்னும் கூடுதலான ராஜதந்திரம் அவசியம். அதைப் பொறுத்துதான் ‘இந்தியா’வின் எதிர்காலம் அமையும்! ●

# தமிழர் பாடசாலைகளில் சாதி பாகுபாடு நிலவுகிறதா?

## 200 பள்ளிகள் மூடப்பட என்ன காரணம்?

யூ.எல். மப்றாக்

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாணத்தில் சுமார் 200 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். கல்விக்கு வழங்கும் நிதியைக் குறைக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனால், வடக்கு மாகாணத்தில் 113 பாடசாலைகள் மட்டுமே தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ரி. ஜோன் குயின்ரஸ் கூறுகின்றார்.

'யுத்தம் முடிவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றத் திட்டத்தின் பின்னர் 62 பாடசாலைகள் திறக்கப்படவில்லை" என அவர் தெரிவித்தார்.

ஏனைய பாடசாலைகள் மாணவர் தொகைக் குறைவினாலும், நகரத்தை நோக்கி மாணவர்கள் இடம்பெயர்ந்தமைக் காரணமாகவும் மூடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



வடக்கிலுள்ள அரச பாடசாலைகளில் முதலாம் வகுப்புக்கு சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் 500 தொடக்கி 600 வரையில் குறைவடைந்து வருவதாகத் தெரிவித்த அவர் அந்த மாகாணத்திலுள்ள தமிழர்களின் சனத்தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சி இதற்கு முக்கிய காரணம் என்கிறார்.

### 180 பாடசாலைகளில் 50க்கும் குறைவான மாணவர்கள்

வடக்கிலுள்ள 986 பாடசாலைகளில் கிட்டத்தட்ட 180 பாடசாலைகள் 50க்கும் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ளதாகவும் அவர் தகவலளித்தார்.

இவற்றில் வவுனியா மாவட்டத்தில் மட்டும் 50 பிள்ளைகளுக்கும் குறைவான 46 பாடசாலைகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மீள்குடியேற்றத்தின் பின்னர் 42 புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் - வேறு பகுதிகளை நோக்கி நகர்ந்தமையினால் இவ்வாறு புதிய பாடசாலைகளை உருவாக்க வேண்டிய தேவை எழுந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

"சாதி மற்றும் சமயங்களால் நீண்டகாலம் மக்கள் பிரிந்து போயிருந்தனர். இப்போது அந்த நிலைமை படிப்படியாக குறைந்து வருகிறது. அதனால் சாதிய ரீதியிலான பாடசாலைகள் என்பதை மக்கள் இப்போது கருத்தில் எடுப்பதில்லை. இதனால் எல்லோரும் எல்லாப் பாடசாலைகளிலும் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுவும் பாடசாலைகள் மூடப்படுவதற்கு பிரதான காரணங்களில் ஒன்றாகும்" என, கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் கூறுகிறார். .

இவ்வாறு தற்காலிகமாக மூடப்படும் பாடசாலைகளின் வளங்கள், அருகிலுள்ள பாடசாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.




### நகரப் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள்

வடக்கில் பாடசாலைகள் மூடப்படுவதற்கு சாதிப் பாகுபாடு குறைந்ததமையும் ஒரு காரணம் என - வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தமை குறித்தும், களத்தில் நிலைமை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டும் வடக்கிலுள்ள சிலருடன் பேசியபோது:

மறைந்த எழுத்தாளர் கே. டானியல் அவர்களின் மகன் - சாம் டானியல் இது குறித்து பேசுகையில், கிராமப் புறங்களிலுள்ள மாணவர்களின் சாதி அடையாளத்தை மறைப்பதற்காகவே அவர்களை நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு பெற்றோர் அனுப்புவதாகவும், சாதிப் புறக்கணிப்பு இன்னும் வடக்கிலுள்ள கிராமப்புறங்களில் அதிகமாகவே உள்ளது எனவும் தெரிவித்தார்.



1984ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரை, அரச பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய சாம் டானியல், தற்போது ஆசிரியத் தொழிலை துறந்துவிட்டு, தனது தந்தையின் பெயரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்தில் மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்தி வருகின்றார். சாதியப் பாகுபாடுகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் சாம் டானியல் தொடர்ச்சியாகவும் உரத்தும் பேசி வருகின்றார்.

"நகர்ப்புறப் பாடசாலைகளில் சாதிப் பாகுபாடுகள் சொல்லும்படியாக இல்லை. ஆனால் கிராமப் புறங்களில் "இந்த" சாதியினருக்கு "இந்த"ப் பாடசாலை எனும் நிலைமை இன்னும் உள்ளது. அங்கு தாழ்த்தப்பட்ட




சாதியினர் - "குறித்த" சில பாடசாலைகளுக்குத்தான் செல்லலாம்.

### அடையாளத்தை மறைக்க விரும்பும் தாழ்த்தப்பட்ட சாதியினர்

கிராமப்புறங்களில் இவ்வாறான சாதிப் பாகுபாடு இன்னும் உள்ளமையினால், தாழ்த்தப்பட்ட சாதியினர் எனக்கூறப்படுவோர் தங்களின் அடையாளத்தை மறைக்க விரும்புகின்றனர். "குறித்த" பாடசாலையில் தங்கள் பிள்ளை படித்தால், அவரின் சாதி அடையாளம் தெரிந்துவிடும் என்பதால், தாழ்த்தப்பட்ட சாதியினரில் கணிசமானோர் - உயர்ந்த சாதியினர் எனக் கூறப்படுவோரின் பிள்ளைகள் படிக்கும் நகரப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்த்து விடுகின்றனர். இதன் காரணமாகத்தான், கிராமப்புறத்திலுள்ள சில பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து அவை மூடப்படுகின்றன" என்கிறார் சாம் டானியல்.

அப்படியென்றால் நகரப் பாடசாலைகளில் சாதி பேதங்களை மறந்து, ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளும் மனநிலை உள்ளதா? என அவரிடம் கேட்டபோது "அப்படியில்லை, கிராமத்திலிருந்து நகரப் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் சாதி பற்றி அங்குள்ளவர்களுக்குத் தெரியாது. மறுபுறம் மாணவர்கள் மத்தியில் சாதிப் பாகுபாடு சற்று குறைந்தும் விட்டது. ஆனால்,



உயர்ந்த சாதியினர் எனக் கூறப்படுவோர் - தமது பிள்ளைகளிடம் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களுடன் சேரக்கூடாது எனக் கூறுவதுண்டு. அதனை சில மாணவர்கள் கேட்பதில்லை. ஆனால் பெற்றோர்களுக்குப் பயந்து அவ்வாறான நண்பர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்வதை தவிர்ப்பார்கள். இருந்தும் வெளியில் நல்ல நண்பர்களாக பழகுவர்" என கூறுகின்றார்.



இவ்வாறு பாடசாலைகளில் மாணவர்கள் சாதி வேறுபாடுகள் பார்க்காமல் பழகினாலும், பல்கலைக்கழகங்களில் சாதிப் பாகுபாடு பார்க்கும் மனநிலை வந்துவிடுகிறது என்றும், குறிப்பாக திருமணத்தின் போது கட்டாயம் சாதி பார்க்கப்படுவதாகவும் சாம் டானியல் தெரிவிக்கின்றார்.

### உயர்ந்த சாதியினரே அதிபராக வரலாம் - எழுதப்படாத விதி

வடக்கிலுள்ள பாடசாலைகள் மூடப்பட்டமைக்கு சாதி அடிப்படையிலான பிரிவினைகள் குறைந்து வருகின்றமையும் ஒரு காரணம் என, அந்த மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர் கூறும் நிலையில், "பாடசாலைகள் மூடப்பட்டமைக்கு சாதிய ஒடுக்கு முறைதான் காரணம்" என்கிறார் நாடக கலைஞர் சீலன். இவர் - சாதியப் பாகுபாட்டுக்கு எதிரான இயங்கும் களச் செயற்பாட்டாளர்.

நகரப் பாடசாலைகளில் சாதியப் புறக்கணிப்புகள் பெரிதாக இல்லை என்றாலும் கூட, கிராமப் பாடசாலைகளில் சாதி ரீதியிலான பாகுபாடுகள் அதிகம் உள்ளது என - அவர் கூறுகின்றார்.

"நகரிலுள்ள கணிசமான பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக பெற்றோரிடம் 01 லட்சம் ரூபா வரையில் 'டொனேஷன்' (அன்பளிப்பு) பெறப்படுகிறது. அவ்வாறு பெருந்தொகை டொனேஷன் கொடுத்து சேரும் மாணவர்கள் - தாழ்த்தப்பட்டவர்கள் என்றாலும் கூட மரியாதையாகவே நடத்தப்படுகின்றனர். சாதிப் புறக்கணிப்பிலிருந்து தப்பிப்பதற்காக தாழ்த்தப்பட்ட மக்கள் தமது பிள்ளைகளை என்ன கஷ்டப்பட்டாவது இவ்வாறான நகரப் பாடசாலைகளில் சேர்த்து விடுகின்றனர்" என சீலன் குடுப்பிடுகின்றார்.

கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகளில் பௌதீக வளங்கள் இருந்தாலும் கூட, அங்குள்ள பிள்ளைகள் ஏன் அந்தப் பாடசாலைகளுக்குச் செல்லாமல், நகரப் பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர் எனக் கேள்வியெழுப்பும் சீலன் "சாதிய ஒழுக்குமுறையே அதற்கான காரணம்" என்கிறார்.

சில பாடசாலைகளில் உயர்ந்த சாதியினரே அதிபராக வரலாம் என்கிற எழுதப்படாத விதி - பரம்பரை பரம்பரையாக இன்னும் உள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பாடசாலைகளில்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஏழ்மையால் படிப்பை கைவிடும் மாணவர்கள்**

வலிகாமம் கிழக்கு பகுதியில் தாழ்த்தப்பட்டவர்களாக கூறப்படும் சமூகத்தவர்களே அதிகம் வாழ்வதாக கூறும் சீலன், அங்குள்ள சில பாடசாலை மூடப்படும் நிலையில் உள்ளதாகவும் தெரி விக்கின்றார்.

“நகரப் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத ஏழைப் பிள்ளைகளே அங்கு படிக்கின்றனர். அங்குள்ள அநேகமான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிடுகின்றனர். ஒருசிலரே தப்பிப்பிழைத்து உயர் கல்வி (12ஆம் வகுப்பு) வரையில் செல்கின்றனர்.

ஒரு மாணவர் தொடர்ச்சியாக குறிப்பிட்ட சில நாட்கள் பாடசாலைக்கு வரவில்லை என்றால், அவரைத் தேடிச்சென்று பாடசாலைக்கு அதிபர், ஆசிரியர்கள் அழைத்து வர வேண்டும். ஆனால், அங்குள்ள சில பாடசாலை ஆசிரியர்கள் அதைச் செய்வதில்லை. அந்த மாணவர்கள் விடயத்தில் அக்கறையெடுக்க மாட்டார்கள். உயர் சாதி எனக் கூறப்படுகின்றவர்களே அங்குள்ள ஆசிரியர்களில் அதிகமானோராக உள்ளனர்” என்கிறார்.

சைவப்பாடசாலைகளில் சாதிப் பாகுபாடு அதிகம் உள்ளது என்றும், ஆனால் கிறிஸ்தவப் பாடசாலைகளில் சாதிப்புறக்கணிப்பு இல்லை எனவும் சீலன் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை உயர்ந்த சாதியினர் எனக் கூறப்படும் சில அதிபர்களும் ஆசிரியர்களும், ஒடுக்கப்பட்ட சாதியினைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியில் மிகவும் அக்கறையெடுத்துச் செயற்படுவதாகவும் அவர் கூறினார்.

“பிள்ளைகள் வறுமை காரணமாக பாடசாலைக் கல்வியை நிறுத்தி விடக் கூடாது என்பதற்காக, வெளிநாட்டிலுள்ளவர்களிடம் நிதியுதவி பெற்று ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு சப்பாத்து மற்றும் உணவு போன்றவற்றை வழங்கும் உயர்ந்த சாதியினர் எனக் கூறப்படும் அதிபர்களும் உள்ளனர்” எனக் கூறிய சீலன், நீர்வேலி வடக்கு பகுதியிலுள்ள பாடசாலையொன்றினை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடுகின்றார்.

**சைவப்பாடசாலைகளில் சாதிப்பாகுபாடு அதிகம் ?**

சைவப் பாடசாலைகளில் சாதிப்பாகுபாடு அதிகமாக உள்ளதாக நாடகக் கலைஞர் சீலன் தெரிவித்தமை குறித்து, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸிடம் கேட்டபோது, சமயம் சார்ந்த தலைவர்களால் நெறிப்படுத்தப்படுகின்ற பாடசாலைகளில் பண்பு மற்றும் பழக்கவழக்க ரீதியாக சில இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படுவதாக கூறினார்.

“1962ஆம் ஆண்டு மிஷனரிமார்களால் சில பாடசாலைகள் கையளிக்கப்பட்டபோது, அந்தப் பாடசாலைகளின் சம்பிரதாய பழக்க வழக்கங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் வேறு சமயம் சார்ந்தவர் அதிபராக இருக்க முடியாது. அது எழுதப்படாக ஒரு நியமமாக இருந்து வருகிறது” என்றார்.

“சைவப் பாடசாலைகளில் சேர் பொன் ராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்றோரின் காலத்தில் சைவப் பாரம்பரியங்கள் இருந்தன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் மிஷனரிமார்கள் காலத்தில் சில பாடசாலைகள் கட்டப்பட்டு அங்கும் சில நியமங்கள் பின்பற்றப்பட்டன. ஆனால் அந்தப் பாடசாலைகளுக்கு தலைமையத்துவத்தை வழங்கக் கூடிய கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ அதிபர்களின் பற்றாக்குறை இன்றுவரை உள்ளது. அதனால் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க பாடசாலைகளில் அந்த சமயம் சார்ந்தவர்கள்தான் அதிபர்களாக இருக்க வேண்டும் எனும் நியமம் இப்போது பல பாடசாலைகளில் இல்லாமல் போய்விட்டது. அங்கு யாரும் அதிபராக இருக்கலாம் எனும் நிலை வந்துவிட்டது” எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கிலுள்ள பாடசாலைகளில் சாதி ரீதியான நடைமுறைகள் 80 சத வீதத்திலிருந்து 20 வீதம் வரை குறைவடைந்துள்ளது எனக் கூறிய மாகாண கல்விப் பணிப்பாளர், கிராமப் புறங்களில் குறிப்பிட்ட சில சாதியினர் அல்லது தொழில் செய்வோர் படிக்கும் பாடசாலைகளுக்கு உயர் சாதியினர் எனக் கூறப்படுவோர் தமது பிள்ளைகளை அனுப்புவதில்லை என குறிப்பிட்டார்.

“எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணம் கடற்கரைப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு, யாழ்ப்பாணம் நகரிலுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்புவதில்லை. அதேபோன்று நகரிலுள்ள ஆசிரியர்ளும் அவ்வாறான பாடசாலைகளுக்குச் செல்ல விரும்புவதில்லை” என கூறிய அவர், ‘இதனை சிலரின் பாரம்பரியமாகவும் மன ரீதியான விடயமாகவுமே பார்க்க முடிகிறது” என்றார்.

**சாதிப் பாகுபாட்டை விடவும், வறுமையே கடுமையானது**

இது இவ்வாறிருக்க மாணவர்கள் தமது கல்வியை கைவிடுவதற்கு சாதிப் புறக்கணிப்பை விடவும், வறுமையே காரணமாக உள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறுகின்றார்.

இலங்கையில் 10,175 பாடசாலைகள் இருப்பதாகவும், அவற்றில் 100 மாணவர்களுக்கும் குறைந்த பாடசாலைகள் 3000 உள்ளன எனவும் அவர் குறிப்பிடுகின்றார். “இவ்வாறு மாணவர் தொகை குறைந்த பாடசாலைகளை மூடும் யோசனையில்தான் அரசு இருக்கின்றது” என அவர் தெரிவிக்கின்றார்.

மாணவர் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளுக்கு வளங்களைக் கொடுக்காமல் அவற்றை மூடும் நிலையை அரசு உருவாக்குவதாகவும் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டுகின்றார்.

“ஒவ்வொரு பிரதேசத்திலும் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு காரணங்கள் உள்ளன. சில பாடசாலைகளிலுள்ள மாணவர்களை எக்காரணம் கொண்டும் நகரப் பாடசாலைகளுக்குச் செல்ல மாட்டார்கள். வறுமை நிலை அதற்குப் பிரதான காரணம். எனவே, ஒரு பாடசாலையில் 10 மாணவர்கள் இருந்தாலும், அவர்களுக்கு கல்வியை வழங்க வேண்டியது அரசின் கடமை. அதிலிருந்து அரசு விலகிச் செல்ல முடியாது” என்கிறார்.

மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதற்கு சாதி பாகுபாட்டை விடவும் வறுமையே பிரதான காரணியாக உள்ளது என ஜோசப் ஸ்டாலின் கூறுகின்றார்.

மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைவதால் பாடசாலைகள் மூடப்படுவதாக அரசு கூறுகின்றது. ஆனால், மாணவர் எண்ணிக்கை ஏன் குறைகிறது என்பதை தேடிப்பார்த்து, அதற்கான காரணத்தைக் கண்டறிந்து, அதனை நிவர்த்தி செய்வதற்கு அரசு ஏன் முயற்சிக்கவில்லை என, அவர் கேள்வியெழுப்புகின்றார்.

(பிபிசி)






# மாணவர்களின் சிகை அலங்காரத்தில் சீரான ஒழுங்குமுறை இருத்தல் அவசியம்

## திருக்கோவில் கூட்டத்தில் வலியுறுத்தல்





காரைதீவு, ஜூலை 28

மாணவர்களது சிகையலங்காரத்தில் சீரான ஒழுங்குமுறையை பேணுதல் தொடர்பான விசேட கூட்டமொன்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில், பாடசாலை மாணவர்களுக்கான சிகையலங்காரமானது பாடசாலை சட்டதிட்டங்களுக்கு அமைவானமுறையில் ஒழுக்கமானதாக சகல சிகை அலங்கார நிலையங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கை சிகை அலங்கார நிலைய உரிமையாளர் சங்கத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனை நேற்று முன்தினம் முதல் திருக்கோவில் கல்வி வலயப் பிரதேசத்தில் முழுமையாக அமுலாக்குவதென தீர்மானிக்கப்பட்டு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் தலைமையில் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகளை சீரமைத்தலும் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வதை ஊக்குவித்தல் மற்றும் மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பான விசேட கலந்துரையாடல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில்,

அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வதை ஊக்குவித்தல்.

மாலை நேரங்களில் மைதானங்களில் மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடும் கலாசாரத்தை ஏற்படுத்துதல்.

வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் ஆலயங்களுக்கு மாணவர்கள் செல்வதை ஊக்குவித்தல்.

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் -9 மற்றும் அதற்குட் பட்ட தரங்களை சேர்ந்த மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையங்களில் வெள்ளிக்கிழமைகளில் பி. ப. 4 மணிக்கு பின்னரும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும் வகுப்புக்களை நடத்துவ தில்லை எனும் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

இத்தீர்மானம் நேற்று முன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்படுமென தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார், திருக்கோவில் பிரதேச செயலாளர் .த. கஜேந்திரன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரன் ஆகியோரது இணைத்தலைமையில் இந்தக் கூட்டம் திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மதத்தலைவர்கள், திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ப. மோகனகாந்தன், திருக்கோவில் பொது சுகாதார பரிசோதகர், பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், திருக்கோவில் வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், சிகைஅலங்கார நிலைய உரிமையாளர்கள் கலந்துகொண்டனர். (அ)



# ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்கான புதிய நிர்வாகக் கட்டடத் தொகுதி திறப்பு

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதான கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்கான புதிய நிருவாகக் கட்டடத் தொகுதி கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் இடவசதிகளின்றி ஓட்டமாவடி நகரில் பழைய கட்டடத்தில் இருந்த பிரதேச செயலக கட்டடம் இடம்மாற்றப்பட்டு காகி நகரில் உள்ள விசாலமான இடத்தில் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புதிய அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் சுற்றாடல் துறை அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ் அமீரலி உட்பட பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றனர்.

# மீன்களின் விலை உயர்வு



திருமலை, ஜூலை 28

திருகோணமலை மீன் பொதுச் சந்தையில் மீன்களின் விலை அதிகரித்துள்ளதாக சில்லறை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் வெளி மாவட்டங்களில் இருந்து கடற்றொழில் நடவடிக்கைக்காக வருபவர்கள் டைனமற், சுருக்குவலை போன்ற சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதினால் வலைகளில் மீன்கள் குறைவாகவே பிடிபடுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

திருகோணமலை மீன் பொதுச் சந்தையில் திருக்கை மீன் ஒரு கிலோகிராம் 800 ரூபாய்க்கும், நெத்தலி 1500 ரூபாய்க்கும், கணவாய் 1100 ரூபாய்க்கும், இறால் 1200 ரூபாய்க்கும் விற்பனையாகி வருகின்றன.

அத்துடன்,மொத்த வியாபாரிகள் அதிக விலைக்கு விற்பதனால் சில்லறை வியாபாரிகள் கிராமங்களுக்குச் சென்று இன்னும் மேலதிக விலைக்கு விற்க வேண்டியுள்ளதாகவும், சில்லறை வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ)

# பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளராக மீண்டும் நவநீதன்



நிந்தவூர், ஜூலை 28

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக சரவணமுத்து நவநீதன் மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மேற்படி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக சரவணமுத்து நவநீதனை மீண்டும் நியமனம் செய்துள்ளமையை அடுத்து, அவர் கடந்த திங்கட்கிழமை திருகோணமலையிலுள்ள தமது திணைக்கள அலுவலகத்தில் கடமைப் பொறுப்பை ஏற்றார்.

ஏற்கனவே கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக சேவையாற்றி வந்த சரவணமுத்து நவநீதன் சிறிது காலம் கிழக்கு மாகாண சபையின் மற்றொரு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

கிழக்கின் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக மீண்டும் சரவண முத்து நவநீதனை நியமித்துள்ளார். (அ)

# நண்பர்களுடன் ஆலய வழிபாட்டுக்கு சென்றவர் குளத்தில் மூழ்கி மரணம்!

## தாந்தாமலையில் சோகம்

மட்டக்களப்பு, ஜூலை 28

கொக்கட்டிச்சோலை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட தாந்தாமலை பிரதேசத்தில் ஆலய வழிபாட்டுக்கு சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எருவில் களுவாஞ்சிகுடி பிரதேசத்தைச் சேர்ந்த மோகன் கதீஸ் (வயது-19) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து தாந்தாமலை ஆலயத்துக்கு வழிபாட்டிற்காக சென்று ஆலயத்தின் அருகில் உள்ள குளத்தில் நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கியுள்ளார். இதனை அவதானித்த நண்பர்கள் அவரை மீட்டெடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்தது.

சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரிக்கு பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(அ)

# மத்திய தரையில் எரியும் தீவுகள்; தீயில் சிக்கி 40 பேர் உயிரிழப்பு!



எதென்ஸ், ஜூலை 28
மத்தியதரைக் கடலில் அமைந்துள்ள கிரேக்க நட்டின் தீவுகள் சில தீயில் எரிந்து கொண்டிருக்கின்றன. உல்லாச பயணிகளைக் கவர்கின்ற கோர்ஃபு, ரோட்ஸ் மற்றும் ஈயூபோயா ஆகிய தீவுகளில் கட்டுக்கடங்காமல் பரந்து பரவிவரும் நெருப்பை அணைக்கும் பணியில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் இரவுபகலாக ஈடுபட்டுவருகின்றனர்.

இதனிடையே பரவி வரும் தீயால் இதுவரை 40 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஈயூபோயா தீவில் தீயணைப்பு பணியில் ஈடுபட்டிருந்த கிரேக்க வான் படையின் தண்ணீர்த் தாரை விமானம் ஒன்றும் தீப்பிடித்து எரிந்து வீழ்ந்து நொறுங்கியது. அதிலிருந்த இரண்டு இளம் விமானிகளும் உயிரிழந்து விட்டனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விமானம் எரிந்து வீழ்ந்த இடத்தை மீட்பு பணியினர் கண்டு பிடித்துள்ளனர்.

இம்முறை கிரேக்க நாடு கடும் வெப்பம் காரணமாக மிக மோசமான காட்டுத் தீ அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு காணப்படும் தற்போதைய நிலவரத்தை"நெருப்புக்கு எதிரான போர்" என்று அந்நாட்டின் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் பிரகடனம் செய்துள்ளார். வெப்ப அனல் கிரேக்க நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பாதித்துள்ளது.

பூமித் தாயின் பிரச்னைகளைக் கவனத்தில் எடுக்காமல் மனிதன் இனிமேல் உலகெங்கும் உல்லாசமாகச் சுற்றித் திரிய முடியாது என்ற செய்தியைக் கிரேக்கத்தின் ரொட்ஸ் தீவில் இடம்பெறும் சம்பவங்கள் இடித்துரைத்திருக்கின்றன. அழகிய தெளிந்த நீர்க் கடற்கரைகள் கொண்ட அந்த உல்லாசத் தீவின் பெரும் பகுதி கடந்த ஒருவார காலத்துக்கும் மேலாக எரிந்துகொண்டிருக்கிறது. சுமார் 33 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தங்களை விரட்டிவருகின்ற நெருப்பில் இருந்து உல்லாசப் பயணிகள் பலரும் ஓடித் தப்பி வெளியேறுகின்ற காட்சிகள் சமூக ஊடகங்களை நிறைத்துள்ளன.

இதனிடையே, போர்த்துக்கல், ஸ்பெயின், இத்தாலி, குரோசியா போன்ற நாடுகளிலும் புதிதாக காட்டுத் தீ மூண்டிருக்கின்றது. கனடா முதல் இத்தாலி வரை - அமெரிக்கா முதல் சீனா வரை- உலகின் பெரும் பகுதிகளைப் பொசுக்கி வரும் தற்போதைய கடும் வெப்பத்தை இயற்கை அனர்த்தம் என்று கூறிவிட முடியாது. இது மனித நடவடிக்கைகள்- தலையீடுகள்- காரணமாக உருவாகிய ஊழிப் பேரழிவு என்று அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர். (ஐ)

# நைஜர் நாட்டில் பதற்றநிலை; ஆட்சி இராணுவத்தின் வசம்!




நியாமே, ஜூலை 28
ஆபிரிக்க நாடான நைஜரில் ஜனாதிபதி முகமது பாசுமை அதிகாரத்திலிருந்து அகற்றி ஆட்சியை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதால் பதற்றம் நீடிக்கிறது.

ஆபிரிக்காவின் நைஜர் நாட்டில் ஜனாதிபதி முகமது பாசும் ஆட்சி அதிகாரத்தில் இருந்து நீக்கப்படுகிறார் என்று இராணுவத்தினர் புதன்கிழமை இரவு அறிவித்தனர். ஆனால், தற்போது ஜனாதிபதி முகமது பாசும் எங்கு இருக்கிறார் என்ற தகவலை இராணுவம் வெளியிடவில்லை. எனினும், ஜனாதிபதி பாசும் தனது பதவியை இராஜிநாமா செய்துவிட்டதாக இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது

தேசிய தொலைக்காட்சியில் தோன்றிய நைஜர் இராணுவ தளபதி அமடோ அப்த்ரமேனே பேசும்போது , "இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகள், ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்துள்ளன. நாட்டின் பாதுகாப்பின்மை, பொருளாதார சரிவு ஆகியவற்றை கருத்தில்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் எல்லைகள் மூடப்படுகின்றன. அனைத்து நிறுவனங்களும் தற்காலிகமாக மூடப்படுகின்றன. சில பகுதிகளில் பதற்றத்தை தவிர்க்க ஊரடங்கு விதிக்கப்படுகிறது" என்று கூறினார்.

இந்த நிலையில், இராணுவத்தின் முடிவை எதிர்த்து நாட்டில் பல இடங்களில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நைஜர் இராணுவத்தின் செயலை அமெரிக்கா, ஐ. நா. சபை, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், ஆபிரிக்க ஒன்றியம் கண்டித்துள்ளன. (ஐ)

# 245 பெண்களிடம் அத்துமீறல்; மருத்துவருக்கு 20 ஆண்டு சிறை



நியூயோர்க், ஜூலை 28
245 பெண்களிடம் பாலியல் அத்துமீறல்களில் ஈடுபட்ட மகப்பேறு மருத்துவருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கை சேர்ந்த மகப்பேறு மருத்துவர் றொபேர்ட் ஹேடன் (64) கடந்த 1980ஆம் ஆண்டுகளில் இருந்து, கொலம்பியா பல்கலைக்கழக இர்விங் மருத்துவ மையம், நியூயார்க்-பிரஸ்பைடிரியன் மருத்துவமனை உள்ளிட்ட முக்கிய மருத்துவமனைகளில் பணியாற்றி உள்ளார்.

அவர் தன்னிடம் மருத்துவ பரிசோதனைக்கு வரும் பெண்களில் பலரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு முதல் அவரது பாலியல் லீலைகள் வெளிவரத் தொடங்கின.

கடந்த 2017ஆம் ஆண்டு பல பெண்கள், தாங்கள் றொபேர்ட் ஹேடனால் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளானதாக குற்றம்சாட்டினர். இதையடுத்து அவருக்கு எதிராக கடந்த 2020இல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மகப்பேறு டாக்டராக பணியாற்றிய காலகட்டத்தில் அவர் 200இற்கும் மேற்பட்ட பெண்கள், அவரால் பாதிக்கப்பட்டனர் என்று முறைப்பாடு அளித்தனர்.

இவர் மீதான வழக்கு நீதிபதி ரிச்சர்ட் எம். பெர்மன் முன் விசாரணைக்கு வந்தது. அனைத்து தரப்பு விசாரணைகளும் முடிந்த நிலையில், 9 பெண்கள் மட்டுமே சாட்சியம் அளித்தனர். இதையடுத்து குற்றம்சாட்டப்பட்ட ராபர்ட் ஹேடனுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

குறைந்தது 245 பெண்கள் தாங்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகினர் என்று புலனாய்வு துறை அதிகாரிகளிடம் தெரிவித்தனர். எனினும், அவர்களில் சிலர் மட்டுமே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உக்ரைனின் முக்கிய இடங்களில் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்!

கீவ், ஜூலை 28
ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் தீவிரமடைந்துள்ளது. இந்த நிலையில், உக்ரைனில் உள்ள வணிக மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களை குறிவைத்து ரஷ்யா தொடர்ந்து ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகிறது.

அந்த வகையில், ஒடேசா நகரத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க பழமையான தேவாலயம் ரஷ்யா ஏவுகணை தாக்குதலில் பலத்த சேதமடைந்தது. இதில், தேவாலயத்தில் இருந்த இருவர் படுகாயமடைந்தனர். தேவாலயத்தில் இருந்த முக்கிய ஆவணங்கள் மற்றும் பொருட்களை பணியாளர்கள் பத்திரமாக மீட்டு வெளியே கொண்டு வந்தனர். (ஐ)



# பாடசாலைகளில் கைபேசிக்கு தடை

## யுனெஸ்கோ வலியுறுத்து

நியூயோர்க், ஜூலை 28
கற்றலை மேம்படுத்தவும் ஒன்லைன் கொடுமைப்படுத்துதலில் இருந்து சிறுவர்களை பாதுகாக்கவும் உலகெங்கிலும் உள்ள பாடசாலைகளில் கைபேசிகளை தடை செய்ய பரிந்துரைத்துள்ளது - என்று ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் கைபேசிகளின் அதிகப்படியான பயன்பாடு கல்வி செயல்திறன் குறைவதற்கும், வகுப்பறையில் மோசமான செயல்திறனுக்கும் வழிவகுக்கிறது. தொழில்நுட்பத்தின் பயன்பாடு மேம்பட்ட கற்றல் அனுபவத்துக்காகவும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நல்வாழ்வுக்காகவும் இருக்க வேண்டும், அவர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது எனவும் யுனெஸ்கோ தெரிவித்துள்ளது. (ஐ)

# ஆஸியில் கரையொதுங்கிய 51 திமிங்கலங்கள் பலி

சிட்னி, ஜூலை 28
நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரை பகுதியில் 100இற்கும் மேற்பட்ட பைலட் திமிங்கலங்கள் திடீரென கரை ஒதுங்கின.

டொல்பின் மீன் வகைகளில் அளவில் பெரிய வகையை சேர்ந்தவை பைலட் திமிங்கலங்கள். இவை ஒரு குழுவாக நீந்தி செல்லும்போது, ஒரு திமிங்கலத்தை பின்தொடர்ந்து மற்ற அனைத்தும் ஒன்றாக செல்லும் பழக்கம் உடையவை.

அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரை பகுதியில் 100இற்கும் மேற்பட்ட பைலட் திமிங்கலங்கள் திடீரென கரை ஒதுங்க தொடங்கின. அவற்றில் 50இற்கும் மேற்பட்டவை உயிரிழந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

ஏனைய திமிங்கலங்களை மீண்டும் ஆழ்கடலில் விடும் முயற்சியில் தன்னார்வ அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. (ஐ)




# “இப்போதைக்கு ஓய்வு இல்லை!”

தனது டெஸ்ட் கிரிக்கெட் எதிர்காலம் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார் இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் அண்டர்சன். தற்போது இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் விளையாடி வரும் ஆஷஷ் தொடரில் அவர் விளையாடி வருகிறார்.

விரைவில் 41ஆவது வயதை எட்ட உள்ள ஜேம்ஸ் அண்டர்சன், அணியில் இடம்பிடிப்பதற்கான சவால் குறித்து நான் அறிவேன் எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002இல் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார். 2003ஆம் அண்டு முதல் இங்கிலாந்து அணிக்காக டெஸ்ட் கிரிக்கெட்டிலும் விளையாடி வருகிறார். இதுவரை 182 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 689 விக்கெட்களை கைப்பறியுள்ளார். டெஸ்ட், ஒருநாள், சர்வதேச இருபது -20 என அனைத்தையும் சேர்த்து 976 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளராக அறியப்படுகிறார். பொதுவாகவே வேகப்பந்து வீச்சாளர்களுக்கு காயங்கள் ஏற்படுவது வழக்கம். ஒவ்வோர் அடியையும் களத்தில் கொஞ்சம் உசாராக எடுத்து வைக்க வேண்டும். அண்டர்சன் இந்த காயங்களை எல்லாம் கடந்துதான் சாதனை படைத்துள்ளார். அதற்காக தன்னைதானே வருத்திக் கொள்கிறார். அதற்கான பலனையும் அறுவடை செய்து வருகிறார். அதனால் இங்கிலாந்து நாட்டவர்கள் என்று மட்டுமல்லாது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை ரசித்து பார்க்கும் ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றவர். இந்த சூழலில் தான் ஓய்வு குறித்து பேசியுள்ளார்.

“நான் சிறப்பான முறையில் பந்து வீசி வருவதாக கருதுகிறேன். இந்த தொடரில் (ஆஷஷ் 2023) நான் எதிர்பார்த்தது கைகூடவில்லை. அனைத்து வீரர்களும் தங்கள் வாழ்வில் இது மாதிரியான சூழலை கடந்து வந்தவர்கள்தான். என்ன அது இந்த மாதிரியான பெரிய தொடரில் இல்லாமல் இருந்திருக்கலாம். 10 அல்லது 15 அண்டுகளுக்கு முன்னர் இது நடந்திருந்தால் அணியில் எனக்கான வாய்ப்பு குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கும். இப்போது எனது வயது காரணமாக கிரிக்கெட் எதிர்காலம் குறித்து கேள்வி எழுப்புகிறார்கள். என்னால் அதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

பயிற்றுவிப்பாளர் மற்றும் அணித் தலைவருடன் பேசினேன். நான் அணியில் இருக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். எனக்குள் வேட்கை இருக்கும் வரையில் அணிக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன். தொடர்ந்து விளையாட விரும்புகிறேன். இப்போதைக்கு இது தான் எனது நிலைப்பாடு” என்று அண்டர்சன் தெரிவித்துள்ளார். (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடம்



இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதிப் போட்டிக்கான புள்ளிப் பட்டியலில் பாகிஸ் தான் முதலிடத்தில் வலுவாக உள்ளது.

பாகிஸ்தான் அணி இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளை யாடியது. இதில், பாகிஸ்தான் 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த டெஸ்ட் தொடர் வெற்றி மூலம் பாகிஸ்தான் அணிக்கு 24 புள்ளிகள் கிடைத்துள்ளன. அந்த அணியின் புள்ளிகள் சதவீதம் 100ஆக உள்ளது. பாகிஸ்தான் அடுத்தபடியாக மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரே லியாவுக்கு எதிராக விளையாட உள்ளது.

டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான புள்ளிப் பட்டியலில் 16 புள்ளிகளுடன் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் புள்ளிகள் சதவீதம் 66.67ஆக உள்ளது. அவுஸ்திரேலியா (26 புள்ளிகள் - 54.17 சதவீதம்) மூன்றாவது இடத்திலும், இங்கிலாந்து (14 புள்ளிகள் - 29.17 சதவீதம்) நான்காவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் (4 புள்ளிகள் - 16.67 சதவீதம்) ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதிப் போட்டி 2025ஆம் ஆண்டு ஜூனில் லண்டனின் லோர்ட்ஸ் மைதா னத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையுடனான டெஸ்ட் தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்




கொழும்பு, ஜூலை 28

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள பாகிஸ்தான் அணி 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த நிலையில், நேற்று இலங்கைக்கு எதிரான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான இந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்புக்கு 576 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. அந்த அணியில் அதிகபட்சமாக தொடக்க ஆட்டக்காரர் ஷபீக் 201 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 19 பௌண்ட்ரிகள் மற்றும் 4 சிக்ஸர்கள் அடங்கும். அவரைத் தொடர்ந்து அதிகபட்சமாக அஹா சல்மான் 132 ஓட்டங்கள் எடுத்து களத்தில் இருந்தார்.

பாகிஸ்தானைக் காட்டிலும் அதிகளவில் ஓட்டங்கள் பின் தங்கியிருந்த நிலையில் இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது. அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன தவிர மற்ற வீரர்கள் சரியாக விளையாடவில்லை.

இலங்கை அணி 188 ஓட்டங்களுக்கு தனது அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அஞ்சலோ மத்தியூஸ் அதிகபட்சமாக 63 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

பாகிஸ்தான் தரப்பில் சிறப்பாக பந்துவீசிய நோமன் அலி 7 விக்கெட்களைக் கைப்பற்றி அசத்தினார்.

இதன்மூலம், பாகிஸ்தான் இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. டெஸ்ட் தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கு இந்தத் தொடர் இரு அணிகளுக்கும் முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சர்வதேச விசாரணையின் ஊடாகவே இனப்படுகொலையை நிரூபிக்கலாம்

## கூறுகிறார் சாள்ஸ் நிர்மலநாதன்



மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

**மன்னார், ஜூலை 28**

**சர்வதேச விசாரணை மூலமாகத்தான் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை நிரூபிக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015 ஆம் ஆண்டு ஐ. நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக சர்வதேச கண்காணிப்பாளர்களின் விசாரணை வேண்டும் என்பதே எங்களுடைய தொடர்ச்சியான வலியுறுத்தலாகும்.

அதன் அடிப்படையில் தான் எங்களுடைய தொடர்ச்சியான கோரிக்கை அமைகிறது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கை என்பது நியாயமான ஒரு கோரிக்கையாக உள்ளது.

இங்கு கொலை செய்தவர்களே விசாரணை செய்வதும் தீர்ப்பளிப்பதுமான ஒரு நாடாக இலங்கை இருக்கிறது.

யார் கொன்றார்களோ, யார் எங்களுக்கு மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தினார்களோ அவர்களே அதனை விசாரிப்பதும், அதற்குரிய தீர்ப்பு வழங்குவதற்கான ஒரு நாடாக இலங்கை இருக்கின்றது.

சர்வதேச விசாரணை மூலமாகத்தான் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை நிரூபிக்க முடியும்.

எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேட்கின்ற சர்வதேச விசாரணை நியாயமானது.

அவர்களுடைய கோரிக்கைக்கு பூரணமான ஆதரவு வழங்கப்படும்-என்றார். (அ)



# பாப்பரசரின் பிரதிநிதி உடக்வே முள்ளிவாய்க்காலுக்கு பயணம்!

முல்லைத்தீவு, ஜூலை 28

பாப்பரசர் பிரான்ஸிஸின் பிரதிநிதி வணக்கத்திற்குரிய கலாநிதி பிறாயன் உடக்வே நேற்று முன் தினம் முல்லைத்தீவுக்கு பயணம்மேற்கொண்டார்.

பாப்பரசர் பிரான்ஸிஸின் பிரதிநிதி கலாநிதி பிறாயன் உடக்வே நேற்று முன் தினம் முள்ளிவாய்க்கால் புனித சின்னப்பர் ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது யுத்தத்தில் உயிர் நீத்த மக்களுக்காக சுடர் ஏற்றி மலர் தூவி அவர் அஞ்சலி செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து அங்கு தெரிவு செய்யப்பட்ட ஊனமுற்ற குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.

தொடர்ந்து முல்லை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தின் மோட்டார் வாகன வரவேற்பு இவருக்கு அளிக்கப்பட்டது.

வட்டுவாகல் பாலம் தொடக்கம் முல்லைப் பட்டினம் சுற்றுவளைவு வரை இந்த விசேட வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சுனாமி நினைவாலய தரிசிப்பிலும் புனித இராயப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற நற்கருணை ஆசீர்வாதத்திலும் அவர் பங்கேற்றார். (அ)

# சிறந்த வெளியுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளார் ரணில்

## பாராட்டுகிறார் தாரக பாலசூரிய



கொழும்பு, ஜூலை 28

சுதந்திர இலங்கையின் சிறந்த வெளியுறவுக் கொள்கையை ஜனாதிபதி நடைமுறைப்படுத்தியுள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனா மற்றும் இந்தியாவுடனான உறவுகளை பிராந்திய ரீதியாகவும் உலகளாவிய ரீதியிலும் விரிவுபடுத்துவதே ஜனாதிபதியின் வேலைத்திட்டமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையின் மூலம் அனைத்து நாடுகளுடனும் நெருக்கமாகப் பணியாற்றிவருகிறோம்.

நாடென்ற வகையில் சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெற முடிந்துள்ளது. தற்போதைய வெளிவிவகாரக் கொள்கையை இலங்கை வரலாற்றில் சிறந்த யுகமாகக் கூறலாம்.

இதன் காரணமாக சர்வதேச சமூகத்துடன் மிகவும் நெருக்கமாக செயற்படுவதுடன் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தவும் வாய்ப்பாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அணிசேரா வெளிவிவகாரக் கொள்கையினால் எமது நாடு இன்று அனைத்து நாடுகளினதும் ஆதரவைப் பெற முடிந்துள்ளது.

இலங்கையின் வரலாற்றில் வெளிநாட்டு உறவுகளின் சிறந்த சகாப்தம் என தற்போதைய வெளியுறவுக் கொள்கையை கூறலாம்.

இதன் காரணமாக அனைத்து சர்வதேச நாடுகளுடனும் நெருக்கமாக செயற்படுவதுடன் நாட்டிற்கு பல அபிவிருத்தி நன்மைகளை பெற்றுக்கொடுக்கக்கூடியதாக உள்ளது-என்றார். (அ)

# குறுகியகால அரசியல் இலாபங்களை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சி!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி குறுகிய கால அரசியல் இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றமை மிகவும் தெளிவான உண்மையாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பில் ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்ட சர்வகட்சி மாநாடு ஜனாதிபதியின் வழமையான அரசியல் செயல்பாட்டின் ஒரு அங்கமேயன்றி வேறில்லை என்பது மிகத்தெளிவான விடயமாகும்.

இவ்வாறான சூழலில் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வு வழங்க முடியுமா என்பது சந்தேகமே.

வடக்கு-கிழக்குப் பிரச்னை உடனடியாக எழவில்லை.பல தசாப்தங்களாக பல்வேறு அரசாங்கங்கள் இப்பிரச்னையை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இருப்பினும் இப்பிரச்னைக்கு இதுவரை எவராலும் நடைமுறை ரீதியான தீர்வை முன்வைக்க முடியவில்லை. இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் மிக முக்கியமான காரணி நல்லெண்ணத்துடன் செயற்படுவதே ஆகும்.

ஜனாதிபதியின் இந்த முயற்சியானது குறுகிய கால அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்கான வேலைத்திட்டமேயன்றி உண்மையான விருப்பத்துடன் முன்வைக்கப்படும் நேர்மையான நடைமுறைப்படுத்தல் அல்ல என்பதை நாம் அவதானிக்கலாம்.

இதற்கு முன்னரும் தற்போதைய ஜனாதிபதிக்கு இப்பிரச்னை தொடர்பில் தலையிட்டு தீர்வுகளை வழங்குவதற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்தமை இரகசியமல்ல.

அத்துடன் ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடமாகியும் இப்பிரச்னைக்குத் தீர்வுகளை வழங்குவதற்கான நியாயமான அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய முயற்சிகளில் அவர் ஈடுபடவில்லை.

கடந்த சுதந்திர தினத்திற்கு முன்னர் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காண தன்னிடம் தீர்வு இருப்பதாக நாட்டுக்கு உணர்த்திய ஜனாதிபதி, வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு பதிலளிக்குமாறு எதிர்க்கட்சியிடம் கேட்கின்றார்.

இப்பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதிக்கு உண்மையான விருப்பம் இருந்தால், அவர் செய்ய வேண்டியது அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினருடனும் சேர்ந்து இணங்கிய பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டும்-என்றார். (அ)

# நீர்க் கட்டணம் உயரும்?

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் எதிர்வரும் ஒகஸ்ட் மாத முற்பகுதியில் இருந்து நீர் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த யோசனை அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சபையின் பொதுமுகாமையாளர் வசந்தா இலங்கசிங்ஹ குறிப்பிட்டார்.

இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டால் ஒகஸ்ட் மாத முற்பகுதியில் இருந்து நீர் கட்டணம் அதிகரிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (அ)

# வனப்பகுதியில் யானைகளுக்கு உணவளிப்போருக்கு அபராதம்!

கொழும்பு, ஜூலை 28

வனப்பகுதியில் வீதி ஓரங்களில் சுற்றித்திரியும் காட்டு யானைகளுக்கு உணவு வழங்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனப்பகுதி வழியாகச் செல்லும் நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்கள், வீதி ஓரங்களில் சுற்றித்திரியும் காட்டு யானைகளுக்கு உணவு வழங்குவதால் விலங்குகள் சாலைக்கு வருவது வழக்கம்.

இதனால் அந்த வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு இடையூறாக யானைகள் உணவு பெறும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

எனவே, வனப்பகுதிகளை கடந்து செல்லும் நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது வன விலங்குகளுக்கு உணவளிப்பதை தவிர்க்குமாறு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மக்களிடம் கேட்டுள்ளது. (அ)

# 3,000 மில்லியன் ரூபாய் மின்சார கட்டணம் நிலுவை

கொழும்பு, ஜூலை 28

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் 3,000 மில்லியன் ரூபா அளவிலான மின் கட்டணம் நிலுவையிலுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

குறித்த நிலுவைத் தொகையை சுகாதார அமைச்சினூடாக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் பொதுமுகாமையாளர் ரொஹான் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 5 மாதங்களில் கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் 339 மில்லியன் ரூபா வரையிலான தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)



## இன்று முழு அடைப்பு...

இன்று முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் திரண்டு கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பல மனிதப் புதைகுழிகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதும், அவை தொடர்பாக இதுவரை அரசுகள் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. பூசி மெழுகப்பட்டு அவற்றின் விசாரணைகள் நீர்த்துப் போகச் செய்யப்பட்டுள்ள நிலையில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் அதுவே நடக்கும் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இந்த விசாரணைகள் சரியான முறையில் நடக்க வேண்டும் என்றும், அகழ்வுப் பணிகளில் சர்வதேசக் கண்காணிப்பு அவசியம் என்றும் தமிழ் மக்கள் வலியுறுத்துகின்றனர். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

வர்த்தக சங்கங்களும், போக்குவரத்துச் சங்கங்களும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முல்லைத்தீவில் நடக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கும் அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க செயலாளர் கலாரஞ்சினி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கவனவீர்ப்புப் பேரணியில் கலந்துகொள்பவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை மேற்கொண்ட குழாய் பொருத்துவதற்கான அகழ்வு நடவடிக்கைகளில் மனித எலும்பு எச்சங்களும், ஆடைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து நீதிமன்ற அனுமதி பெற்று கடந்த 6ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மேலதிக அகழ்வு நடவடிக்கைகளில் 13 மனித உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அகழ்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த அகழ்வு நடவடிக்கையைத் தொடர்வதற்கான மேலதிக நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அகழ்வு நடவடிக்கைகளில் தொல்லியல் திணைக்களமும் உள்வாங்கப்படும் என்று தெரியவருகின்றது. (அ)

## வசந்த...

அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இந்திக்க விதான பத்திரன எனும் உறுப்பினரே வசந்த முதலிகேயுடன் கைது செய்யப்பட்ட மற்றைய நபராவார். (அ)

## இந்தியப்...

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் சர்வகட்சி மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸை தவிர்ந்து வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சியாக இவ்வாறு பல கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ள போதிலும் எவ்வித ஆக்கபூர்வமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை யென்ற அதிருப்தியில் இக்கட்சிகள் உள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போதும், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு பிரதமர் மோடி அழுத்தத்தை கொடுத்திருந்தார்.

ஆனால், நேற்று முன் தினம் நடைபெற்ற சர்வக்கட்சி மாநாட்டில் தெற்கில் உள்ள பிரதானக் கட்சிகள் அனைத்தும் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

தமிழ்த் தரப்பின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இந்தக் கட்சிகளுக்கு இல்லையென கூட்டத்தில் கலந்துகொண்ட வடக்கின் தமிழ் எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக வெறும் பேச்சுகள் மாத்திரம் இடம்பெறுமானால் அது பயனற்றதாகும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, "இந்திய பிரதமரை சந்திப்பதற்கான கோரிக்கை கடிதமொன்று கடந்த காலத்தில் அனுப்பிருந்தோம். எமது கோரிக்கை குறித்து இந்த சூழலில் அவர் பரிசீலிப்பார் என எதிர்பார்க்கிறோம்.

நாம் கோரிக்கை விடுத்திருந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் காலம் என்பதால் சந்திக்க முடியாதென பிரதமர் மோடி கூறியிருந்தார்.

தற்போது அதிகாரப் பகிர்வு பற்றிய பேச்சுகள் இலங்கையில் பேசுபொருளாக உள்ளதால் அவர் தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பு குறித்து அவர் கரிசனை கொள்வார்.

நாமும் பிரதமர் மோடியை சந்திப்பதற்கான கோரிக்கையை எதிர்காலத்தில் முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம்" என்றும் அவர் கூறினார். (அ)

## 5 இஸ்லாமிய...

தௌஹீத் அமைப்புக்களாக அறியப்படும் ஐக்கிய தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (யூ.டி.ஜே.), சிலோன் தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (சி.டி.ஜே.), ஸ்ரீலங்கா தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (எஸ்.எல்.டி.ஜே.), அகில இலங்கை தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (ஏ.சி.டி.ஜே.), ஜம்மியதுல் அன்ஸாரி சுன்னதுல் மொஹமதியா (ஜே.ஏ.எஸ்.எம்.) ஆகியவற்றின் மீதான தடைகளை தளர்த்தவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தடைகளை நீக்க முடிவெடுக்க முன்னர், இதுவரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் சாராம்சம், சட்ட மா அதிபரின் ஆலோசனை உள்ளிட்டவற்றை பாதுகாப்பு அமைச்சு பெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த முஸ்லிம் சமூக பிரதிநிதிகளின் கோரிக்கையும் தடை நீக்கத்தில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது.

முன்னதாக நாட்டின் சமாதானத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் சட்டவாட்சியின் நலனில் அரசாங்கத்தின் முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அடிப்படைவாதத்துடன் தொடர்புடைய 11 அமைப்புகளை தடை செய்வதாக அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டு அரசாங்கம் அறிவித்தது. (அ)

# பாடசாலை புத்தகப் பைகள், காலணிகள் விலை குறைப்பு

கொழும்பு, ஜுலை 28

பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் காலணிகள் என்பவற்றின் விலை 10 வீதத்தால் குறைக்க உற்பத்தியாளர்கள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நிதி அமைச்சில் பாடசாலை புத்தகப் பை மற்றும் காலணி உற்பத்தியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

மேலும், சந்தையில் இருக்கும் புத்தக பைகள் மற்றும் காலணிகளின் கையிருப்புகளை திருத்தப்பட்ட விலையில் வழங்க உள்ளதாகவும் உற்பத்தியாளர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர். (அ)

# வவுனியாவில் சீனி ஆலைக்கு காணி; தனக்கு தெரியாது என்கிறார் ஆளுநர்

வவுனியா, ஜுலை 28

வவுனியாவில் சீனித் தொழிற்சாலைக்கு காணி கொடுப்பது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது என வடக்கு மாகாண ஆளுநர் பீ. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் ஆளுநரின் இணைப்பு பணிமனையைத் திறந்து வைத்த பின் ஊடகவியலாளர்கள் 'சீனித் தொழிற்சாலைக்கு வவுனியாவில் காணி ஒதுக்கப்பட்டதாக கூறப்படுகிறது' இது



தொடர்பில் உங்கள் கருத்து என்ன என கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் சீனித் தொழிற்சாலைக்கு காணி கொடுப்பது தொடர்பில் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக ஊடகங்களுக்கு மறைக்க வேண்டிய தேவை இல்லை. உண்மையில் இது தொடர்பில் எனக்கு தெரியாது-என்றார்.

## ஹர்த்தாலுக்கு...

களில் தமிழினப் படுகொலை நடைபெற்று 40 ஆண்டுகள் நிறைவு பெற்றும் தமிழினத்துக்கு நீதி கிடைக்கவில்லை என்பது உலகறிந்த வரலாறாகும்.

தமிழின அழிப்புக்கு ஆளாகிய தமிழின மக்களின் இந்தக்காலம் துக்க காலமாகும். தங்கள் தேசத்துக்கு தமிழ் மக்களுக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் - தமிழ் மக்கள் ஆறாத் துயருடன் கண்ணீருடன் நாளைய தினத்தைத் துக்கநாளாக அறிவித்துள்ளனர். அதை ஆதரித்து நாம் ஹர்த்தாலாகக் கடைப்பிடிக்கின்றோம்.

தமிழர் மனித குலம் புதைகுழிக்குள் புதைக்கப்பட்டு அழிக்கப்பட்டமை இலங்கையில் கறைபடிந்த வரலாறு. அந்த ஆத்மாக்களுக்கு ஆறுதலும், வருங்கால தமிழினத்துக்கு நீதியும் விடுதலையும் கிடைக்க வேண்டி அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டியது கடப்பாடாகும். அதற்காக அனைவருக்கும் அழைப்பு விடுவிக்கின்றோம்-என்றுள்ளது. (அ)

## 13ஆவது திருத்த...

தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் விக்டர் ஐவன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

இந்தியா சில மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்துள்ளது. சிலவற்றுக்கு குறைவாகவே வழங்கப்படுகிறது. அதிகாரப் பகிர்வு ஒரே மாதிரியாக இருக்க வேண்டியதில்லை என்று அர்த்தம்.

வேண்டுமானால் வடக்குக்கு சில வருடங்கள் அதிகாரத்தை பகிர்ந்தளித்து அதனை எவ்வாறு ஆட்சி செய்வது என்று பார்க்கலாம். விடயங்கள் சரியாக நடந்தால், தேவையான மற்ற மாகாணங்களுக்கு அதிகாரத்தை வழங்க முடியும். சில சந்தர்ப்பங்களில், நாம் ஒரு மென்மையான கொள்கையை பின்பற்ற வேண்டும். இதை நாம் புதிய கோணத்தில் பார்க்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையை நாம் புதிய கோணத்தில் பார்க்க வேண்டும். அந்த புதிய வழி நாட்டிற்கு நல்லது என்றால், சிறுபான்மையினருக்கும் நல்லது என்றால், இந்தியாவும் மற்ற நாடுகளும் நமது நாட்டில் தலையிடாது-என்றுள்ளது. (அ)

## இனப்பிரச்னை...

முடியும்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வகட்சி மாநாடு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தத்தை முழுமையாகப் பொலிஸ் அதிகாரத்துடன் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, கெவிது குமாரதுங்க, சரத் வீரசேகர ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன மாகாண சபைத் தேர்தலை உடனே நடத்தவேண்டும் என்று கோரின.

தேர்தலை நடத்தினால் தெற்கின் ஏழு மாகாணங்களிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை ரணில் வழங்கிவிட்டால் என்ற வாறே தென்னிலங்கையில் இனவாதப் பரப்புரை நடக்கும். அதனால் தேர்தல்களை நடத்த முடியாது என்று ஜனாதிபதி ரணில் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலைத் தவிர வேறு எந்தத் தேர்தலையும் எந்தக் காரணத்துக்காகவும் ரணில் நடத்தமாட்டார் என்பது தெளிவாகின்றது. இதுவே இப்போதுள்ள அரசியல் நிலைமை. எனவே, ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராவோம்.

புதிய ஜனாதிபதி, அதையடுத்துப் புதிய பாராளுமன்றம் என்ற நிலைமாறல்களுக்குப் பின்னர்தான் தேசிய இனப் பிரச்னை தொடர்பில் எந்த மாற்றமும் ஏற்பட முடியும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் கட்சிகளுக்கு இடையே தீர்வு தொடர்பில் முரண்பாடு!

## கூறுகின்றார் சுரேன் ராகவன்

கொழும்பு, ஜூலை 28

சர்வகட்சி மாநாடு இடம்பெற்றபோது, தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கட்சி தலைவர்களுக்கு உண்மையில் என்ன தீர்வு வேண்டும் என்பதில் பொதுவான கருத்தொற்றுமை இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்பின் 13ஆவது திருத்தம், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மற்றும் தமிழ் சமூகத்துக்கான அதிகார பகிர்வு தொடர்பில் முரண்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களை விரைவில் பொதுநிலைக்கு வருமாறு வலியுறுத்திய அவர், நாடு நெருக்கடியிலிருந்து விடுபட வேண்டுமானால் ஒற்றுமை அவசியமாகும் என சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# 13ஆவது திருத்தம் குறித்து ஜனாதிபதிக்கு விமல் கடிதம்

கொழும்பு, ஜூலை 28

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடு பிரிவினைவாதத்தின் பொறியாக மாறும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடு பிரிவினைவாதத்தின் பொறியாக மாறும் ஆபத்து மற்றும் உண்மையாக தேசிய பிரச்னையை தீர்க்கும் விதம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கியுள்ள நீண்ட கடிதத்தில் வீரவன்ஸ இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் தேசிய சுதந்திர முன்னணியின் சார்பில் விமல் வீரவன்ஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதால், நாடு பிரிவினைவாதத்தை நோக்கி தள்ளப்படும் ஆபத்து குறித்து இவர்கள் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இதனையடுத்து உண்மையில் தேசிய பிரச்னைக்கு தீர்வு காணும் விதம் தொடர்பாக எழுதிய கடிதத்தை வீரவன்ஸ, ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். (அ)

# சுகாதார அமைச்சர் தவறு செய்யவில்லை மொட்டு அவருக்காக குரல் கொடுக்கும்

கொழும்பு, ஜூலை 28

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தவறுகள் எதனையும் செய்யவில்லை எனவும் அவர் மீது எந்த குற்றமும் இல்லை என்பதால், பொதுஜன பெரமுன அவருக்காக குரல் கொடுக்கும் எனவும் அந்த கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதனடிப்படையில், சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனிடையே அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒருங்கிணைப்பு தொடர்பான பேச்சுகளை கட்சி ஆரம்பித்துள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படவேண்டிய பொருத்தமான வேட்பாளர் மற்றும் கட்சியின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமான முதலாவது பேச்சு அநுராதபுரத்தில் நடைபெற்றது.அநுராதபுரத்தை கேந்திரமாக கொண்டே பொதுஜன பெரமுனவின் அனைத்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

இதேவேளை கட்சிக்குள் இருந்துக்கொண்டு சூழ்ச்சியில் ஈடுபட்டு வந்த சூழ்ச்சியாளர்கள் அனைவரும் கட்சியில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# மீண்டும் மக்கள் பிளவுபடுவதே ஜனாதிபதி ரணிலின் நோக்கம்

## திஸ்ஸ விதாரண எம். பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 28**

**நாட்டு மக்களை மீண்டும் பிளவுபடுத்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சி மாநாட்டை கூட்டியதன் நோக்கமென திஸ்ஸ விதாரண எம். பி தெரிவித்தார்.**

ஜனாதிபதியால் பொருளாதார ரீதியாக நாட்டை கட்டியெழுப்ப முடியாதுபோனால், 13ஆவது திருத்தச் சட்டம் என்ற விடயத்தை தான் தப்பிப்பதற்காக பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகார பரவலாக்கம் மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இணக்கத்தை ஏற்படுத்த முடியாத சூழலை உருவாக்கி, அதனை ஆயுதமாக பயன்படுத்த ஜனாதிபதி முயற்சித்து வருகிறார்.

பொருளாதார பிரச்னைக்கு ஜனாதிபதியால் தீர்வுகாண முடியாது போனால், இந்த பிரச்னையை பயன்படுத்தி மக்களை பிளவுபடுத்த முயற்சிப்பார்.

இப்படியான பிரச்னையை கிளப்பி விட்டால், அவர் தனக்கான பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியும் இதுதான் நிலைமை-என்றார். (அ)

# இலங்கை வருகின்றார் பிரான்ஸ் ஜனாதிபதி



கொழும்பு, ஜூலை 28

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி தனது விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்கள் தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# புற்றுநோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் தற்போது புற்றுநோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்படும் மரணங்களுக்கு இரண்டாவது பொதுவான காரணியாக புற்றுநோய் உள்ளது என தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர், சமூக பல் மருத்துவ நிபுணர் இஷானி பெர்னாண்டோ தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இந்த விடயத்தை கூறினார்.

2019 ஆம் ஆண்டு 15 ஆயிரத்து 599 பேர் புற்றுநோயால் உயிரிழந்த நிலையில், 2020 ஆம் ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 37 ஆயிரத்து 649 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மருத்துவ நிபுணர் இஷானி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

மேலும், ஆண்களிடையே வாய் புற்றுநோய் பொதுவாக பரவிவரும் நிலையில் புகையிலை பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு போதுமான திட்டங்கள் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், நாட்டில் புகையிலை பயன்பாட்டுக்கு எதிராக போதுமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டுமென தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி திட்டத்தின் பணிப்பாளர், சமூக பல் மருத்துவ நிபுணர் இஷானி பெர்னாண்டோ வலியுறுத்தினார்.

இதனிடையே, நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களில் 50 வீதமானவர்கள் இறக்கின்றனர் கண்டறியப்பட்டுள்ளது.

# தபால் சேவை திணைக்களத்தின் 42 வாகனங்களை காணவில்லை

கொழும்பு, ஜூலை 28

தபால்மா அதிபரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட 42 வாகனங்கள் குறித்து திணைக்களத்திடம் எந்த தகவலும் இல்லை என்று தேசிய கணக்கு தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தபால் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்தபோது, இந்த வாகனங்கள் இல்லாதது தெரிய வந்துள்ளதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தபால்மா அதிபர் ருவன் சத்குமார கருத்து வெளியிடுகையில்-

இந்த வாகனங்கள் 30-50 வருடங்களுக்கு இடைப்பட்டவையாகும்.

இந்த வாகனங்கள் பற்றிய தகவல்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தரவு பதிவேடுகளில் உள்ளன. ஆனால், தபால் திணைக்களத்தின் பொருட்கள் பட்டியலில் இவை இல்லை.

இதுகுறித்து மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் இதுவரை எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை. வாகனங்கள் தொடர்பில் தகவல் இல்லை என்றால் அவற்றை தரவு அமைப்பிலிருந்து நீக்கவேண்டும் -என்றார். (அ)

# செம்பியன்பற்று காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமராட்சி கிழக்கு பகுதியில் தொடர்ந்து நான்காவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட காணி அளவீட்டு முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று வடக்கு பகுதியில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான ஒன்றரை பரப்புக் காணியை கடற்படையினருக்காக அபகரிக்கும் நோக்கில் நேற்று அளவீட்டுப் பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு காணி உரிமையாளர், கிராம மக்கள்,அரசியல் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து காணி அளவீட்டு பணி தற்காலிகமாக கைவிடப்பட்டது.

முன்னதாக கடந்த மூன்று நாட்களாக வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் இவ்வாறு கடற்படையினருக்கு காணியை அபகரிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட காணி அளவீட்டு முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.